வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : eelanaduweekly@gmail.com
மலர் : 05
27.04.2024 சனிக்கிழமை
இதழ் : 118
பக்கங்கள் : 12




# வட, கிழக்கில் வெப்பநிலை 40 பாகையை கடக்கின்றது!

- மைதான நிகழ்ச்சியை மாணவர்கள் தவிர்க்கவும்
- நோயாளர், முதியோர் பகல் பயணத்தை தவிர்க்கவும்

யாழ்ப்பாணம்,ஏப். 27

வடக்கு, கிழக்கில் நாளை முதல் எதிர்வரும் மே 12ஆம் திகதி வரை வெப்பநிலை தற்போதைய நிலையை விட அதிகமாக இருக்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. இது வெப்ப அலை சுட்டெண்ணின் ஆபத்தான வைகப் பாட்டுக்குள் இருக்க வாய்ப்புள்ளது. 30ஆம் திகதியின் பின்னர் வெப்ப நிலை பகல்பொழுதில் 40 பாகை செல்சியஸுக்கு மேலாக இருக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

- இவ்வாறு யாழ். பல்கலைக்கழகத்தின் புவியியல்துறையின் மூத்த விரிவுரையாளர் நா. பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் உட்பட்ட நாட்டின் பல பகுதிகளிலும் தற்போது காணப்படும்

11

## ஆஸ்துமா நோய் தாக்கம் இலங்கையே முன்னிலை!

கொழும்பு, ஏப். 27

உலகில் ஆஸ்துமா (முட்டு) நோயால் அதிகம் பாதிக்கப்பட்ட நாடுகளில் இலங்கை முன்னிலையில் உள்ளது என்று இலங்கை சுவாச நோய் நிபுணர்கள் சங்கத்தின் தலைவர் மருத்துவர் நிரஞ்சன் திஸநாயக்கா தெரிவித்துள்ளார்.

நாட்டின் சனத்தொகையில் 10 முதல் 15 சதவீத மானவர்கள் ஆஸ்துமா நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த நோய், சிறுவர்கள், இளைஞர்கள் மற்றும் முதியோரின் மனம் மற்றும் உடல் ஆரோக்கியத்தை பாதிக்கிறது. எனவே, இந்த நோயை உரிய முறையில் கட்டுப்படுத்தாது விடின் அது மரணத்துக்கே வழிவகுக்கும்.

90 சதவீதமான ஆஸ்துமா நோயாளர்களை

11

## அமைச்சரவையிலிருந்து விஜயதாஸவை நீக்குங்கள்

### ஜனாதிபதியை கோரியது பெரமுன

கொழும்பு, ஏப். 27

நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவை அமைச்சரவையில் இருந்து நீக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் சிறீலங்கா பொதுஜன பெரமுன கட்சி கோரியுள்ளது.

எதிரணி அரசியல் நடத்துகின்றோம் எனக் கூறும் சிறீ லங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து செயல்படுவதாலும், அந்தக் கட்சியின் பதில் தலைவராக பதவியேற்றதாலும் அவரை அமைச்சரவையில் இருந்து நீக்க வேண் டும் என்று கோரப்பட்டதாக பொதுஜன பெரமுன உயர் வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேநேரம், விஜயதாஸவை பதவி நீக்கிய பின்னர் நீதி அமைச்சுக்கு

11

## ஈஸ்டர் தாக்குதல்: பின்னணியில் இலங்கையர் எவருமில்லை!

### மைத்திரி அளித்த இரகசிய வாக்குமூலத்தில் வெளிவந்ததாம்

கொழும்பு, ஏப்ரல் 27

**உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால அளித்த வாக்குமூலத்தில் இலங்கையை சேர்ந்த எவரின் பெயரையும் குறிப்பிடவில்லை என்று மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.**

நேற்று பாராளுமன்றத்தில் அமைச்சர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் மூளையாக செயல்பட்டவர் என்று மைத்திரிபால சிறிசேன குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்கு வாக்குமூலம் அளித்துள்ளார். அந்த வாக்குமூலத்தில் இலங்கையைச் சேர்ந்த எவரின் பெயரையும் அவர் தெரிவிக்கவில்லை என்றும் அமைச்சர் கூறினார். (ஐ)

## மட்டு. ஆயர் யோசப் ஓய்வு பெறுகின்றார்?

மட்டக்களப்பு,ஏப். 27

மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் யோசப் பொன்னையா ஆண்டகை தமது பணியிலிருந்து ஓய்வுபெறவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

அவர் தனது பதவி விலகல் கடிதத்தை இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி பிரைன் உடாக்வே ஊடாக பாப்பரசருக்கு அனுப்பி வைத்துள்ளார் என்று கூறப்படுகின்றது. எனினும், இந்தத் தகவலை உறுதிப்படுத்த முடியவில்லை.

அண்மைக்காலமாக தொடர்ச்சியாக உடலநல பாதிப்புகளை எதிர்கொண்டு வருவதாலேயே அவர் ஆயர் பதவியிலிருந்து ஓய்வு பெறுகிறார் என்று கூறப்படுகின்றது.

மட்டக்களப்பு மறை மாவட்டத்தின் ஆயரான

11

## இந்திய, ரஷ்ய நிறுவனத்திடம் மத்தள விமான நிலையம்!

கொழும்பு, ஏப். 27

மத்தள விமான நிலையத்தின் நிர்வாகத்தை இந்தியா மற்றும் ரஷ்ய நிறுவனங்களிடம் ஒப்படைப்பதற்கு இலங்கை அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

30 வருட காலத்துக்கு ரஷ்யா - இந்திய கூட்டு முயற்சிக்கு ஒப்படைப்பதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது என அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

இந்தியாவின் சௌர்யா ஏரோநோட்டிக்ஸ் ரஷ்யாவின் எயர்போர்ட் ரீஜன்ஸ் முகாமைத்துவ நிறுவனத்திடமும் மத்தள விமான நிலையத்தின் நிர்வாகத்தை ஒப்படைப்பதற்கு இலங்கை தீர்மானித்துள்ளது. (ஏ)

## சஜித், அநுரவுடன் மட்டுமா கொழும்பு பேராயருக்கு 'டீல்'?

### இப்படி கேட்கிறார் மகிந்தானந்த

கொழும்பு, ஏப். 27

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் சம்பவத்தை அரசியலாக்குவதை பேராயரும் கத்தோலிக்க சபையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும். கொழும்பு பேராயருக்கு சஜித் பிரேமதாஸ, அநுரகுமார திஸநாயக்க ஆகியோரிடம் மாத்திரமா "டீல்" உள்ளது? - இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் ஆளும் தரப்பின் பாராளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

11

## தந்தை செல்வா நினைவுதினம் வடக்கு, கிழக்கில் அனுஷ்டிப்பு!

யாழ்ப்பாணம், ஏப். 27

ஈழத் தமிழர்களின் தந்தை என்று சிறப்பாகக் குறிப்பிடப்படும் எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் 47ஆவது ஆண்டு நினைவுதினம் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

பிரதான நினைவேந்தல் யாழ்ப்பாணம் நகரில் அமைந்துள்ள தந்தை செல்வா நினைவுத் தூபியில் நடைபெற்றது.

11



## ஓ. எல். பரீட்சை மீள்பரிசீலனை முடிவு இரு வாரங்களில் வரும்!

### கல்வி அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, ஏப். 27

க. பொ. த. சாதாரண தர பரீட்சை விடைத்தாள் மீள் பரிசீலனை முடிவுகள் இரு வாரங்களுக்குள் வெளியிடப்படும் என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

நேற்றைய தினம் பாராளுமன்றத்தில் காமினி வலேபொட எம். பிக்கு பதிலளித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கல்வி பொது தராதர சாதாரண தர பரீட்சைக்கு தோற்றிய ஒரு இலட்சத்து 80 ஆயிரம் மாணவர்கள் பரீட்சை பெறுபேறுகள்மீதான மீள்பரிசீலனை

11

## முறிகண்டி விபத்தில் சிப்பாய் பலி!

முல்லைத்தீவு, ஏப். 27

இராணுவ கெப் வாகனம் பாரவூர்தியுடன் மோதி கவிழ்ந்த விபத்தில் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார். அத்துடன், 9 படையினர் காயமடைந்துள்ளனர். முல்லைத்தீவு - முறிகண்டி ஏ-9 வீதியில்

11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது

ரஷ்யாவுக்கும் உக்ரைனுக்கும் யுத்தம் தொடங்கியதும் மேற்குலகம் ரஷ்யாமீது பொருளாதாரத் தடையை விதித்தது. அதனால் பயனடைந்தது இந்தியாதான். ரஷ்யாவிடம் முப்பது வீதம் விலைக்கழிவில் மசகு எண்ணெயைப் பெற்று மீண்டும் ஐரோப்பாவுக்கே அனுப்பி இலாபம் பார்த்து வருகின்றது இந்தியா.

இப்போது ஈரானுக்கு எதிராக முழு மேற்குலகமும் திரண்டு நிற்கின்றது. சிரியாவிலுள்ள ஈரான் துணைத் தூதரகத்தின்மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து, இஸ்ரேல் மீது ஏவுகணை மற்றும் ட்ரோன் தாக்குதலை நடத்தியது ஈரான். இந்தத் தாக்குதலை அடுத்து இரு நாடுகளுக்கும் இடையே போர் பதற்றம் ஏற்பட்டதோடு இஸ்ரேலுக்கு ஆதரவாக முழு மேற்குலகமும் திரண்டு நின்றது.

இரு நாடுகளுக்கும் இடையே இவ்வாறு போர் பதற்றம் நிலவிய சூழலிலேயே ஈரான் அதிபர் பாகிஸ்தானுக்கும் இலங்கைக்கும் விஜயம் செய்து திரும்பியிருக்கிறார். ஈரான் அதிபரின் இலங்கை விஜயத்தை மேற்குலகம், குறிப்பாக அமெரிக்கா ரசித்திருக்காது என்பதற்கு அப்பால் தனது பலத்த கண்டனத்தையும் பதிவுசெய்ததாகவும் செய்திகள் வெளிவந்தன. இந்த நிலையிலேயே, ஈரான் அதிபர் திட்டமிட்டவாறு இலங்கைக்கு வந்து திரும்பியிருக்கிறார். ஈரான்மீது ஏற்கனவே அமெரிக்கா பொருளாதாரத் தடை விதித்திருந்தாலும் ஈரானே நமது முக்கிய எரிபொருள் விநியோகஸ்தர்.

இப்போது அமெரிக்காவின் எதிர்ப்பையும் மீறி தன்னை இலங்கை வரவேற்றிருப்பது ஈரானுக்கு நிச்சயம் மகிழ்ச்சிக்குரியதே. ஆனால், அப்படி அமெரிக்காவின் எதிர்ப்பையும் மீறி ரணில் இந்த காரியத்தைச் செய்திருப்பாரா என்பது தெரியவில்லை. “நாங்கள் எதிர்ப்பதுபோல எதிர்க்கிறோம், நீங்கள் அதனையும் மீறி வரவேற்பதுபோல வரவேற்று ஈரானிடமிருந்து எந்த உதவியைப் பெறமுடியுமோ பெறுங்கள்” என்று அமெரிக்காவே ஆலோசனை சொல்லியிருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஏனெனில், என்ன விலைகொடுத்தும் ரணிலை மீண்டும் பதவியில் அமர்த்த வேண்டும் என்பது அமெரிக்காவின் விருப்பம் என்பதும் இரகசியமானது அல்லவே.

இப்போது இந்த நிலைமைகளை தனக்கு சாதகமாக்கியிருக்கிறார் ரணில் என்கின்றன அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள். ஈரான் ஜனாதிபதியிடம் ரணில் விடுத்த பல கோரிக்கைகளுக்கு அவர் சாதகமாகப் பதிலளித்திருக்கிறாராம். அதில் முக்கியமானது, சந்தை விலையிலும் பார்க்க மிகப்பெரிய கழிவு விலையில் எரிபொருளை விற்க ஈரான் இணங்கியிருக்கின்றது என்றும், அவ்வாறு உலக சந்தை விலையிலும் பார்க்க மலிவுவிலையில் எரிபொருள் கிடைத்தால், உடனடியாக நாட்டில் எரிபொருளின் விலையை மிகப்பெரிய அளவில் குறைக்கமுடியும் என்றும் அவ்வாறு எரிபொருள் விலை குறையும்போது, தாமாகவே பல அத்தியாவசிய சேவைகளின் விலைகளிலும் அத்தியாவசிய பொருட்களின் விலைகளிலும் அது தாக்கத்தை ஏற்படுத்தும் எனவும் நம்பும் ரணில் இவை அனைத்தும் நடந்த பின்னரே ஜனாதிபதித் தேர்தலில் தான் போட்டியிடவிருப்பது பற்றிய அறிவிப்பை உத்தியோகபூர்வமாக வெளியிடுவார் என்றும் நம்பப்படுகின்றது.

இதனால் ரணில் ஏற்கனவே திட்டமிட்ட பல திட்டங்களைப் பின்போட்டிருக்கின்றாராம்.

நடக்கவிருக்கும் மே தினக் கூட்டத்தில் முழு நாடும் பிரமிக்கும் வகையில் மிகப்பெரிய சனக்கூட்டத்துடன் நடத்துவதற்கும், அந்த மேடையில் தன்னோடு கைகோக்கவிருக்கும் அனைவரையும் ஏற்றுவதற்கும் திட்டமிட்டிருந்த ரணில் இப்போது அந்தத் திட்டத்தை மாற்றியமைத்திருக்கிறாராம். நடக்கவிருக்கும் மே தினக் கூட்டம் வெறும் ஐக்கிய தேசியக் கட்சியின் மே தினக் கூட்டமாகவே நடக்கவிருக்கின்றது.

ஏற்கனவே திட்டமிட்டவாறு அறுபதாயிரத்திற்கும் குறையாத மக்களை கொண்டு வந்து அந்த மே தினத்தை நடத்தும் அதேவேளையில் பொதுஜன பெரமுனவிலிருந்து வருகின்ற - அல்லது எற்கனவே வந்தவர்கள் யாரையும் மேடையில் ஏற்றாமல் தவிர்ப்பது என்றும் முடிவெடுக்கப்பட்டிருக்கின்றதாம்.

அதைவிட முக்கியமானது, கடந்த இரண்டாயிரத்து பதினைந்தாம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் பொதுவேட்பாளராக சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளராக இருந்த மைத்திரிபால சிறிசேனவை கடைசிநேரத்தில் தமது பக்கம் எடுத்து வேட்பாளராக்கியது போல, கடைசி நேரத்தில் ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து ஏராளமானவர்களை தனது பக்கம் எடுக்கின்ற திட்டத்தில் இருக்கிறார் ரணில் என்கின்றன அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள்.

தனது திட்டத்தின்படி இவை அனைத்தும் நடக்கின்றபோது, தனக்கான வெற்றி நிச்சயமாகின்றபோது, ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து பலர் வருவார்கள் என்று நம்பும் அவர், அதுவரை தான் வேட்பாளராக போட்டியிடவிருப்பதை அறிவிப்பதையும் பின்போட்டிருக்கிறாராம்.

**- ஊர்க்குருவி.**

# முகமாலையில் மனித எச்சம்



முகமாலை, ஏப். 27

முகமாலையில் மனித எச்சங்கள் மற்றும் மனித எச்சம் இனங்காணப்பட்ட பகுதிகளை கிளிநொச்சி - நீதிவான் இஸ்மாத் ஜெமில் நேற்றுக் காலை சென்று பார்வையிட்டார். அத்தோடு, கண்ணிவெடி அகற்றும் பணியாளர்களின் பணியைத் தொடருமாறும் அறிவுறுத்தினார்.

கிளிநொச்சி, பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முக மாலைப் பகுதியில் கண்ணிவெடி அகற்றலின் போது மனித எச்சங்களுடன் கூடிய ஆடை ஒன்றும் இனங்காணப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பில் பளை பொலிஸாருக்குத் தகவல் வழங்கியதையடுத்து பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர்.

தொடர்ந்து பொலிஸார் மாவட்ட நீதிவானின் கவனத்துக்கு கொண்டு சென்றனர்.

கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதிவான் இஸ்மாத் ஜெமில் நேற்றுக் காலை சம்பவ இடத்துக்குச் சென்று குறித்த மனித எச்சங்கள் மற்றும் மனித எச்சம் இனங்காணப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டார்.

தொடர்ந்து குறித்த பகுதியில் கண்ணிவெடி அகற்றும் பணியாளர்கள் மூலம் கண்ணிவெடி அகற்றும் பணியை முன்னெடுக்குமாறும், கிடைக்கப்பெறுகின்ற எச்சங்கள் மற்றும் தடயங்கள் தொடர்பாக பளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் கவனத்துக்கு கொண்டு செல்லுமாறும் அறிவுறுத்தினார்.

அத்துடன் கிடைக்கப்பெற்ற மனித எச்சங்களை சட்ட மருத்துவ அதிகாரி மூலம் பரிசோதனைக்கு உட்படுத்த அனுப்பி வைக்குமாறும் தெரிவித்தார்.

எதிர்வரும் திங்கட்கிழமை சம்பவ இடத்தை மீண்டும் வந்து பார்வையிடுவதாகவும் நீதிவான் தெரிவித்தார். (எ)

# வீட்டில் திருடப்பட்ட நகைகள் வீட்டின் கூரையிலிருந்து மீட்பு

வவுனியா, ஏப். 27

வவுனியா நகரசபையின் முன்னாள் உபதவிசாளர் வீட்டில் திருடப்பட்ட ஒரு கோடி ரூபாய் பெறுமதியான 60 பவுண் தங்க நகைகள் அவரது வீட்டின் கூரையிலிருந்து மீட்கப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

புளொட் அமைப்பின் மத்திய குழு உறுப்பினரான வவுனியா நகரசபையின் முன்னாள் உபதவிசாளரின் கோவில்குளம் பகுதியிலுள்ள வீட்டில் கடந்த ஞாயிற்றுக் கிழமை 60 பவுண் நகையும், கடவுச் சீட்டு ஒன்றும் திருடப்பட்டதாக வீட்டு உரிமையாளரால் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

குறித்த முறைப்பாட்டையடுத்து வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையத்தின் குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்தனர். குறித்த விசாரணைகளின் போது அவர்களது வீட்டிலிருந்த சி. சி. ரிவி கமராக்களும் காணாமல் போயிருந்தமை தெரியவந்தது.

விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் திருடப்பட்ட குறித்த வீட்டின் கூரைப் பகுதியின் கீழ் சூட்சுமமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 60 பவுண் நகைகளையும் மீட்டதுடன், கடவுச்சீட்டும் கண்டுபிடிக்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பில் வீட்டில் நின்றவர்கள் மற்றும் வெளிநாட்டிலிருந்து வருகை தந்து தங்கியிருந்த அவர்களது உறவினர்கள் ஆகியோர் பொலிஸாரால் தீவிர விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டனர். நகைகள் மீட்கப்பட்டு பொலிஸ் நிலையத்தில் உள்ளதுடன் அதனை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கைகளை எடுத்துள்ளதுடன், இச்சம்பவம் தொடர்பில் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை என பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# போதைப் பொருளுடன் 16 பெண்கள் சிக்கினர்

கொழும்பு, ஏப். 27

நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போது நச்சுத்தன்மைமிக்க போதைப் பொருட்களுடன் 16 பெண்கள் உட்பட 660 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் 23 பேர் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

போதைப்பொருட்களுக்கு அடிமையாகியுள்ள 3 பேரை புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்களிடமிருந்து 66 கிராம் ஹெரோயின், 232 கிராம் கஞ்சா, 167 கிராம் ஐஸ், 653 கிராம் கஞ்சா மற்றும் 20 கிராம் ஹெரோயின் உள்ளிட்ட போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. (எ)

# பாதாள குழுக்களைச் சேர்ந்த 603 பேர் இதுவரையில் கைது

கொழும்பு, ஏப். 27

பாதாள உலகச் செயல்பாடுகளை ஒடுக்குவதற்காக உருவாக்கப்பட்ட 20 குழுவினரால் நாடளாவிய ரீதியில் நேற்று மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் பாதாள உலகக் குழுக்களைச் சேர்ந்த 9 பேர் கைது செய்யப்பட்டனர். இதேவேளை, கடந்த ஒரு மாதமாக முன்னெடுக்கப்பட்டு வரும் இந்த நடவடிக்கையில் பாதாள உலகக் குற்றக் குழுக்களைச் சேர்ந்த 603 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் கூறினார்.

இதன்போது பாதாள உலகக் குழுக்களைச் சேர்ந்தவர்களுடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணியதாக சந்தேகிக்கப்படும் 25 பேரும் கைது செய்யப்பட்டனர்.

மேல் மாகாணத்தின் தெற்கு பிராந்திய பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் ஹங்வெல்ல, ரணால மற்றும் அங்கொடை ஆகிய பகுதிகளைச் 39, 40, 42 மற்றும் 43 வயதுடைய நான்கு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

மாத்தறை பொலிஸ் குற்றத்தடுப்புப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் கப்புருகமுவ, வெலிகம மற்றும் தெலிஜ்ஜவில ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 31, 26 மற்றும் 29 வயதுடைய மூன்று சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

கொழும்பு பொலிஸ் குற்றத்தடுப்புப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் வெல்லம்பிட்டிய மற்றும் மட்டக்குளி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 33 வயதுடைய இரண்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

கடந்த மாதம் 19 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்த சுற்றிவளைப்பில் இதுவரை பாதாள உலகக் குற்றக் குழுக்களைச் சேர்ந்த 603 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.(எ)

Eelanadu ஈழநாடு
27.04.2024 சனிக்கிழமை
குரோதி வருடம், சித்திரை 14

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# செல்வநாயகத்தை நினைக்கும் தகுதி

இலங்கை தமிழ் அரசு கட்சியின் ஸ்தாபகர் எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்களின் 47ஆவது நினைவு தினம் தமிழ் அரசு கட்சியினரால் வடக்கு, கிழக்கில் நினைவு கொள்ளப்பட்டிருக்கின்றது. வழக்கத்துக்கு மாறாக செல்வநாயகத்தை நினைப்பதில் கூடுதல் கரிசனையும் காண்பிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது.

ஆனால், செல்வநாயகத்தை எவ்வாறானதொரு சூழலில் இவர்கள் நினைவு கொள்கின்றார்கள்? அவர் உருவாக்கிய இலங்கை தமிழ் அரசு கட்சியை நீதிமன்றத்தில் நிறுத்திவிட்டுத்தான் செல்வநாயகத்தை நினைவு கொள்கின்றார்கள். செல்வநாயகத்துக்கு தெரியாத ஜனநாயகம் தங்களுக்கு தெரியும் என்று எண்ணியதன் காரணமாகவே தமிழ் அரசு கட்சியின் எதிர்காலம் ஊசலாடிக் கொண்டிருக்கின்றது.

தமிழ்த் தேசிய அரசியல் வரலாற்றில் இரண்டு பேரைத்தான் தமிழ் மக்கள் பெரும்பான்மையாக அங்கீகரித்தனர். அதில் முதலாவதானவர் செல்வநாயகம், இரண்டாவது விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரன். விடுதலைப் புலிகளின் எழுச்சியின் காரணமாகவே பிரபாகரன் எழுச்சியுற்றார். அது பல்லாயிரக்கணக்கான இளைஞர், யுவதிகளின் உயிர் தியாகங்களுடன் தொடர்புடையது. ஆனால், செல்வநாயகத்தை தமிழ் மக்கள் தந்தையென்று அழைத்தார்கள். தமிழ் ஜனநாயக தேசிய வாதத்தின் தந்தையாகவே அவரும் செயல்பட்டார். ஆனால், அவ்வாறான ஒருவரால் உருவாக்கப்பட்ட கட்சி இன்று எந்த நிலையில் இருக்கின்றது? அதிகாரப் போட்டியினதும் உட்பூசல்களினதும் கூடாரமாகவே கட்சி மாற்றப்பட்டிருக்கின்றது.

இன்றைய இளைய தலைமுறை எந்தவொரு கட்சியின்மீதும் அரசியல்வாதிகள்மீதும் நம்பிக்கை வைக்க முடியாதளவுக்கே நிலைமை இருக்கின்றது. நம்பிக்கை வைக்கக்கூடிய தகுதிநிலையை எவருமே நிரூபிக்கவும் இல்லை. ஒப்பீட்டு அடிப்படையில் தமிழ் அரசு கட்சி வடக்கு, கிழக்கு தழுவியதாக கட்டமைப்புகளை பேணிவந்தது. ஆனால், அதிகாரப் போட்டியால் அதுவும் தற்போது கீழ்நிலைக்கு சென்றுவிட்டது.

செல்வநாயகம் தனது நிலைப்பாடுகளில் இறுக்கமானவராக ஒருபோதுமே இருந்ததில்லை. சமஷ்டியை முன்வைத்திருந்தாலும்கூட, அதனை ஒரு பாய்ச்சலில் அடைந்துவிட முடியுமென்று அவர் ஒருபோதும் எண்ணியதில்லை. இதனால்தான் அவரின் மருமகன் கலாநிதி ஏ. ஜே. வில்சன், செல்வநாயகம் தொடர்பில் இவ்வாறு கூறினார் – அதாவது, அவர் கேக் கிடைக்கவில்லை என்பதற்காக பாணை நிராகரிக்கின்ற தலைவர் அல்ல – என்றார்.

வில்சன் கூறியிருப்பதற்கு ஏற்றவாறுதான் செல்வநாயகத்தின் அரசியல் அணுகுமுறை இருந்தது. தான் உருவாக்கிய கட்சிக்கு சமஷ்டி கட்சியென்று பெயர் வைத்த செல்வநாயகம் இலங்கை அரசுடன் பேச்சுக்கு சென்றபோது சமஷ்டி பற்றிப் பேசவில்லை. குறைவான அரசியல் ஏற்பாடுகள் தொடர்பிலேயே பேசினார். 1957இல் பண்டா – செல்வா, 1965இல் டட்லி – செல்வா உடன்பாடுகளின்போது அவர் சமஷ்டிக்கு அருகில்கூடச் செல்லவில்லை. ஏனெனில், அவர் ஒன்றை அறிந்திருந்தார் – அதாவது, தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை ஒரு பாய்ச்சலில் அடைய முடியாது. பின்னர், அனைத்து முயற்சிகளும் தோல்வியுற்றதன் பின்னரான நிலையில்தான் வட்டுக்கோட்டை தீர்மானத்தை சிந்தித்தார். அதுவும் அடையமுடியுமென்று அவர் கருதிச் செயல்பட்டதாக சான்றுகள் இல்லை. அதனையும் ஓர் அழுத்த நிலைப்பாடாக முன்வைத்ததாகத்தான் நோக்க வேண்டியிருக்கின்றது.

இன்றைய தமிழ் அரசு கட்சியோ செல்வநாயகத்தின் சிந்தனைகளுக்கு அருகில்கூடச் செல்ல முடியாத நிலையில் அவரை நினைப்பதன் ஊடாக தங்களுடைய தவறுகளுக்கு வெள்ளையடிக்க முயற்சிக்கின்றது. இன்றிருப்பது, செல்வநாயகத்தின் வழித்தடத்தில் நடைபழகிய தமிழ் அரசு கட்சியல்ல. இந்த நிலையில் அவரை நினைவுகொள்ளும் தகுதி இன்றைய தமிழ் அரசு கட்சிக்கு இருக்கின்றதா?

# உண்மையை உறுதிப்படுத்துவதற்கு சர்வதேச வகிபாகம் தொடர்ந்தும் பொருத்தமானதே

ශ්‍රී ලංකා ජාතික සාම මණ්ඩලය
தேசிய சமாதானப் பேரவை
National Peace Council of Sri Lanka

*சுமார் 300 பேரைப் பலியெடுத்து மேலும் 500 க்கும் அதிகமானவர்களை படுகாயங்களுக்குள்ளாக்கிய ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்களின் ஐந்தாவது வருட நினைவை இலங்கை ஏப்ரில் 21 அனுஷ்டிததது. நீடித்துநிற்கும் அதன் விளைவுகளை நாம் மனதிற்கொள்ள வேண்டியது அவசியமாகும்.*

*வெளிநாட்டு முதலீடுகள் மற்றும் சுற்றுலாப் பயணிகளின் வருகையில் ஏற்பட்ட வீழ்ச்சியின் விளைவான பொருளாதார தாக்கங்கள் நாட்டை தொடர்ந்து அச்சுறுத்திக் கொண்டேயிருக்கின்றன. மக்கள் இன்று பெரும் பொருளாதாரச் சவால்களுக்கு முகங்கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.*

*மக்களின் அக்கறைக்குரியவையாக இருக்கும் பொறுப்புக்கூறல் மற்றும் வெளிப்படைத்தன்மை இல்லாததன் விளைவாக அரசாங்க தலைமைத்துவத்தின் மீதான நம்பிக்கை சிதைவடைந்திருப்பது குறித்து தேசிய சமாதானப் பேரவை கவலையடைகிறது. இந்த நிலைமை துரதிர்ஷ்டவசமாக ஆட்சிமுறைமையின் மீது மக்கள் நம்பிக்கை இழந்து விரக்தியடையவும் மேலும் அநீதிகளுக்கும் வழிவகுத்திருக்கிறது.*

*உத்தியோகபூர்வமான பல விசாரணைகள் நடத்தப்பட்டபோதிலும், ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்களுக்கு வழிவகுத்த நிகழ்வுகள் தொடர்பிலான கேள்விகள் தொடரவே செய்கின்றன. பொறுப்பற்ற முறையில் தங்களது கடமையைச் செய்யத் தவறியவரகளில் சிலர் அதற்கான விளைவுகளைச் சந்தித்தபோதிலும், மூடிமறைப்புகள் இடம்பெற்றிருக்கின்றன என்ற உணர்வு மக்கள் மத்தியில் தொடரவே செய்கிறது.*

*தகவல்கள் மறைத்து வைக்கப்பட்டதாக வெளிவருகின்ற கதைகள் உண்மையைக் கண்டறிவதற்கு புதிய உறுதிப்பாட்டுக்கான தேவையை மேலும் வலியுறுத்துகின்றன. அடுத்தடுத்து பதவிக்கு வந்த இலங்கை அரசாங்கங்கள் உண்மையை உறுதிப் படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கத் தவறியதன் காரணமாகவே ஜெனீவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை சான்றுகளைச் சேகரிக்கும் அதன் பிரிவை தொடர்ந்து*

*செயற்படுத்தவேண்டும் என்ற நிலைப்பாடு நியாயப்படுத்தப்படுகிறது.*

*ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்களில் பலியானவர்களை புனிதர்களாக அல்லது தியாகிகளாக திருநிலைப் படுத்துவதற்கு நாட்டின் கத்தோலிக்கத் திருச்சபை மேற்கொள்கின்ற முயற்சியின் நோக்கம் படுகொலைகள் பற்றிய நினைவை தேசிய ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் உயிர்த்துடிப்புடன் வைத்திருப்பதேயாகும். இதற்கு சர்வதேச முன்னுதாரணங்கள் இருக்கின்றன.*

*2019 ஈஸ்டர் ஞாயிறு குண்டுத்தாக்குதல் நிகழ்வுகளை நாம் சிந்தித்துப் பார்க்கின்றபோது இலங்கயின் வரலாற்றைக் கறைபடுத்திய வன்செயல் மற்றும் அநீதியின் பரந்த பின்புலத்தையும் புரிந்துகொள்ள வேண்டும்.*


*1989 ஆம் ஆண்டில் உச்சநிலைக்குச் சென்ற ஜே.வி.பி.யின் கிளர்ச்சி தொடக்கம் 2009 மேயில் கொடூரமான முறையில் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட உள்நாட்டுப் போர் வரை மோதல்களினதும் வன்முறைகளினதும் காயங்கள் ஆழமானவையாக இருக்கின்றன.*

*நல்லிணக்கத்துக்கான எமது தேடலில் எமது கடந்த காலத்தின் வேதனைமிகு உண்மைகளுக்கு முகங்கொடுத்து நீதி, பொறுப்புக்கூறல் மற்றும் குணப்படுத்தல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு எதிர்காலத்தைக் கட்டியெழுப்பப் பாடுபடவேண்டும்.*

*முன்னோக்கிச் செலாலவேண்டுமானால், நீதிக்கான தேடுதல் பக்கச்சார்பான நலன்களையும் தேர்தல் ஆணைகளையும் கடந்தவையாக இருக்கவேண்டியது அவசியமாகும். எதிர்வரும் தேர்தல்களும் அரசாங்க மாற்றமும் பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கத்தை நோக்கிய முயற்சிகளுக்கு புதுச் சக்தியைக் கொடுப்பதற்கான ஒரு வாய்ப்பை வழங்குகிறது.*

*தற்போதைய அரசாங்கத்தின் தலைமைத்துவமும் எதிர்கால அரசாங்கத்தின் தலைமைத்துவமும் சுயநலன்களின் நெருக்குதல்களில் இருந்து விடுபட்டு நீதிக்கும் வெளிப்படைத் தன்மைக்குமான தேடலுக்கு முன்னுரிமை கொடுக்கவேண்டும்.*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சிலர் உங்களை சீண்டிப் பார்ப்பார்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் ஈகோ பிரச்னை வந்து நீங்கும். வேலைச் சுமை மிகுந்த நாள்.

**இடபம்**
பிள்ளைகள் உங்கள் பேச்சிற்கு மதிப்பளிப்பார்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள். திறமைகள் வெளிப்படும் நாள்.

**மிதுனம்**
அரசால் அனுகூலம் உண்டு. மற்றவர்களால் பயனடைவீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் அதிசயிக்கும் படி நடந்துக் கொள்வீர்கள். வியாபாரத்தில் வரவு உயரும். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**கடகம்**
உங்களை சுற்றியிருப்பவர்களின் சுயரூபம் தெரியவரும். வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். கனவு நனவாகும் நாள்.

**சிம்மம்**
திட்டமிட்ட காரியங்கள் தடையின்றி முடியும். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள்.வியாபாரத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். சக ஊழி யர்கள் ஆதரிப்பார்கள். உழைப்பால் உயரும் நாள்.

**கன்னி**
உடன்பிறந்தவர்கள் வளர்ச்சிக்கு சாதகமாக இருப்பார்கள். புது வாகனம் வாங்குவீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல் லித் தருவார். வெற்றிக்கு வித்திடும் நாள்.

**துலாம்**
குடும்பத்தில் இருந்து வந்த பிரச்னைகள் விலகும். அரைகுறையாக நின்ற வேலைகள் முடியும். உடல் நலம் சீராகும். வியாபாரத்தில் இழந்ததை மீட்பீர்கள். அலுவலகத்தில் மரியாதை கூடும்.

**விருட்சிகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் தோல்வி மனப்பான்மையால் மன இறுக்கம் அதிகரிக்கும். கூடுதலாக வேலைப் பார்க்க வேண்டி வரும். விட்டுக் கொடுத்துப் போக வேண்டிய நாள்.

**தனுசு**
எதிர்காலம் பற்றிய வீண் டென்ஷன் வந்து செல்லும். வியாபாரத்தில் போராடி லாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் பிரச்னைகள் வரக்கூடும். கவனம் தேவைப்படும் நாள்.

**மகரம்**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். மதிப்பு கூடும் நாள்.

**கும்பம்**
உறவினர்கள், நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பார்கள். வியாபாரத்தில் எதிர்பாராத தன லாபம் உண்டு. சாதித்துக் காட்டும் நாள்.

**மீனம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன்-மனைவிக்குள் இருந்த பிணக்குகள் நீங்கும். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். உத்தியோகத்தில் பழைய சிக்கல்கள் தீரும். புத்துணர்ச்சி பெருகும்.

# கொடுமைகளை தடுப்பதில் தமிழக அரசு படுதோல்வி!

## ராமதாஸ் கண்டனம்



சென்னை, ஏப். 27

பட்டியலினத்தோருக்கு எதிரான வன்கொடுமைகளைத் தடுப்பதில் தமிழக அரசு தொடர்ந்து படுதோல்வியடைந்து வருகிறது. - இவ்வாறு பா. ம. க. நிறுவுநர் ராமதாஸ் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் வெளியிட்டுள்ள சமூக வலைத்தளப் பதிவில், “புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வக்கோட்டை ஒன்றியம் சங்கம்விடுதி ஊராட்சிக்குட்பட்ட குருவண்டான் தெருவில் பட்டியலின மக்களுக்கு குடிநீர் வழங்குவதற்காக அமைக்கப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் மாட்டுச்சாணம் கலக்கப்பட்டிருப்பதாக வெளியாகியுள்ள செய்திகள் அதிர்ச்சியளிக்கின்றன.

பொதுமக்கள் குடிப்பதற்கான குடிநீர்த் தொட்டியில் மாட்டுச்சாணம் கலக்கப்பட்டது மனிதநேயமற்றது மட்டுமின்றி மனிதத் தன்மையற்ற செயலாகும். இது கடுமையாகக் கண்டிக்கத்தக்கது.- என்று குறிப்பிட்டுள்ளார். (எ)

# அந்த பணத்துக்கும் எனக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை

## நயினார் நாகேந்திரன் விளக்கம்





சென்னை, ஏப். 27

தேர்தல் பறக்கும் படையினரால் கைப்பற்றப்பட்ட 4 கோடி ரூபாய் பணத்துக்கும் தனக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்று

பா. ஜ. க. எம். எல். ஏ. நயினார் நாகேந்திரன் தெரிவித்தார்.

கைதானவர்கள் 3 பேர் மட்டுமல்ல, இதில் தொடர்புடைய நிறைய பேர் எனக்குத் தெரிந்தவர்கள், எனது சொந்தக்காரர்கள் தான். - என்றும் அவர் குறிப்பிட்டார்.

தாம்பரம் ரயில் நிலையத்தில் கடந்த சில நாட்களுக்கு முன்பு, நயினார் நாகேந்திரனின் ஹோட்டல் ஊழியர்கள் உள்ளிட்ட மூவரிடம் 3.99 கோடி ரூபாய் பணம் கைப்பற்றப்பட்டது. இந்த விவகாரத்தில் நெல்லை பா. ஜ. க. எம். எல். ஏ. நயினார் நாகேந்திரனுக்கு தாம்பரம் பொலிஸார் இரண்டாவது அழைப்பாணை அனுப்பினர்.

இது தொடர்பில், செய்தியாளர்களைச் சந்தித்த நயினார் நாகேந்திரன், “ மே 2 ஆம் திகதி விசாரணைக்கு ஆஜராகும்படி அழைப்பாணை கொடுத்துள்ளனர். முழுக்க முழுக்க என்னை குறிவைத்து செயல்படுகின்றனர். இதனை அரசியல் சூழ்ச்சியாகவே பார்க்கிறேன். தமிழகத்தில் 200 கோடி ரூபாய்க்கு மேல் கைப்பற்றியுள்ளனர். ஆனால், 4 கோடி ரூபாயை யாரோ எங்கோ கொண்டு சென்றதில் எனது பெயரையும் சேர்த்து சூழ்ச்சி செய்கின்றனர்.- என்றார். (எ)

# நிர்மலாதேவி வழக்கு தீர்ப்பு ஒத்திவைப்பு



சிறீ வில்லிபுத்தூர், ஏப். 27

கல்லூரி மாணவிகளைத் தவறாக வழிநடத்த முயற்சித்த பேராசிரியை நிர்மலா தேவி வழக்கின் தீர்ப்பு நாளை மறுதினம் 29 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

அருப்புக்கோட்டை தனியார் கல்லூரி மாணவிகளைத் தவறாக வழிநடத்த முயற்சித்ததாக அக்கல்லூரியின் பேராசிரியை நிர்மலா தேவி, மதுரை காமராசர் பல்கலை. பேராசிரியர் முருகன், ஆய்வு மாணவர் கறுப்புச்சாமி ஆகியோர் மீது கடந்த 2018 ஆம் ஆண்டு பொலிஸார் வழக்குப் பதிவு செய்தனர். இந்த வழக்கு சி. பி. சி. ஐ. டி. விசாரணைக்கு மாற்றப்பட்டது.

சிறீ வில்லிபுத்தூரிலுள்ள மாவட்ட விரைவு மகளிர் நீதிமன்றத்தில் இந்த வழக்கு விசாரணை நடந்து வந்தது. இந்த வழக்கில் இருதரப்பு வாதங்கள், விசாரணை நிறைவுபெற்ற நிலையில் நேற்றுத் தீர்ப்பு வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில், நிர்மலா தேவி நீதிமன்றத்தில் முன்னிலையாகாததால் தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டது. (எ)

# தண்ணீர்த் தேவையை தமிழக அரசு முழுமையாக பூர்த்தி செய்ய வேண்டும்

## ஜி. கே. வாசன் வலியுறுத்தல்

சென்னை, ஏப். 27

கோடைக்காலத்தில் மக்களின் தண்ணீர் தேவையை முழுமையாகப் பூர்த்தி செய்ய தமிழக அரசு உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று த. மா. கா. தலைவர் ஜி. கே. வாசன் வலியுறுத்தினார். இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், கடந்த ஆண்டை விட இப்போ தைய கோடைக்காலத்தில் அதிக வெப்ப அலை வீசும். தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட வாய்ப்புண்டு என செய்திகள் வெளியாகியுள்ளன.


இப்போது கோடை வெயிலின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரிக்கிறது. தமிழகத்திலுள்ள நீர்நிலைகளில் நீரின் அளவு குறைந்து வருகிறது. பல இடங்களிலுள்ள நீர்த்தேக்கங்கள் வறண்டு காணப்படுகின்றன. சில இடங்களில் மக்கள் குடிநீருக்காக தொலைதூரத்துக்கு சென்று வரக்கூடிய நிலை உள்ளது.- என்று தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார். (எ)

# தந்தை செல்வா நினைவுதினம் யாழ்ப்பாணத்தில் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 27

**தந்தை செல்வா என்று அழைக்கப்படும் எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் 47ஆவது ஆண்டு நினைவுதினம் நேற்று வடக்கு, கிழக்கில் அனுஷ்டிக்கப்பட்டது.**

**இலங்கை தமிழ் அரசு கட்சியின் நிறுவுநர் தலைவரான தந்தை செல்வாவின் சமாதி அமைந்துள்ள யாழ்ப்பாணம் தந்தை செல்வநாயகம் நினைவுத் தூபியில் பிரதான நிகழ்வு நடைபெற்றது.**



தந்தை செல்வா நினைவுக் குழுவின் ஏற்பாட்டில் நடந்த இந்த நிகழ்வில் தந்தை செல்வாவின் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு, மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.

தொடர்ந்து, யாழ்ப்பாண பல்கலைக்கழக பேராசிரியர் கே. ரி. கணேசலிங்கம் “இலங்கை தமிழ் தேசிய இனத்தின் விடுதலைக்கான வாய்ப்புக்களும் சவால்களும்” எனும் தலைப்பில் நினைவுப் பேருரை ஆற்றினார்.

இந்த நிகழ்வில் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் உள்ளிட்ட கட்சியின் மூத்த பிரமுகர்கள், அரசியல் பிரமுகர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ)

# வடக்கு ஆளுநர் பணிமனை கைகலப்பில் ஒருவர் காயம்!

யாழ்ப்பாணம், ஏப். 27

வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தின் பணியாளர்கள் இருவரிடையே ஏற்பட்ட மோதலில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

ஆளுநர் செயலகத்தின் பணிமனை உத்தியோகத்தரும் துப்புரவு பணியில் ஈடுபடும் நபரும் மோதிக் கொண்டனர் என்றும் இதில் காயமடைந்த பணிமனை உத்தியோகத்தர் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அத்துடன், தன்னை தாக்கிய துப்புரவு பணியாளருக்கு எதிராக அவர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடும் வழங்கியுள்ளார். (ஐ)

# பீடி புகைக்க முயன்றவர் தீயில் எரிந்து உயிரிழப்பு

தெல்லிப்பழை, ஏப். 27

பீடி புகைப்பதற்காக நெருப்பு பற்றவைத்தபோது படுக்கை தீப்பற்றியதில் முதியவர் எரியுண்டு உயிரிழந்தார்.

அளவெட்டி தெற்கில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் ஐயம்பிள்ளை தேவராசா என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

உயிரிழந்த முதியவர் தனது மகளுடன் வசித்து வந்துள்ளார். அவரின் மகள் வெளியே சென்றிருந்த நிலையில், அவர் பீடி புகைக்க முயன்றுள்ளார். அப்போதே, படுக்கை தீப்பற்றி அவர் உயிரிழந்தார் என்று கூறப்படுகின்றது.

இந்த சம்பவம் தொடர்பில் திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் நடத்தினார். (ஐ)

# போதை மாத்திரைகளுடன் 3ஆம் முறை இளைஞர் கைது

யாழ்ப்பாணம், ஏப். 27

இளைஞர்களுக்கு போதை மாத்திரைகளை விற்பனைக்கு வைத்திருந்த இளைஞர் ஒருவரை மூன்றாவது முறையாக கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதானவர் கொக்குவில் மேற்கை சேர்ந்த 20 வயது இளைஞராவார்.

விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் கஸ்தூரியார் வீதியில் நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கையில் இந்த இளைஞர் கைது செய்யப்பட்டார்.

அவரிடமிருந்து ஆயிரத்து 400 போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டன. அவர், சட்ட நடவடிக்கைக்காக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

குறித்த இளைஞர், முன்னரும் 2 ஆயிரம் மற்றும் 5 ஆயிரம் போதை மாத்திரைகளுடன் இரு தடவைகள் கைது செய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# குடும்பஸ்தர் கடத்தப்பட்டு கொலை; பிரதான சந்தேகநபரும் கைதானார்!

யாழ்ப்பாணம், ஏப். 27

வட்டுக்கோட்டையை சேர்ந்த இளம் குடும்பஸ்தர் கடத்தப்பட்டு வெட்டிக் கொல்லப்பட்ட சம்பவத்துடன் தேடப்பட்டு வந்த பிரதான சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் இதுவரை 9 பேர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

எனினும், பிரதான சந்தேக நபர் என்று கூறப்படும் நபர் தலைமறைவாக இருந்தார். இந்த நபரே நேற்று முன்தினம் காரை நகரில் வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

முன்னதாக, கடந்த 11ஆம் திகதி இரவு பொன்னாலை கடற்படை முகாம் அருகே மோட்டார் சைக்கிளில் மனைவியுடன் வந்த இளம் குடும்பஸ்தர் கும்பல் ஒன்றால் கடத்தப்பட்டார். இந்தக் கடத்தலுக்கு கடற்படையும் உதவியதாகக் கூறப்படுகின்றது. மனைவியும் குடும்பஸ்தரும் தனித்தனி கார்களில் கடத்தப்பட்ட நிலையில், மனைவி சித்தங்கேணி சந்தியில் இறக்கி விடப்பட்டார்.

இளம் குடும்பஸ்தர் படுகாயங்களுடன் வட்டுக்கோட்டை பிரதேச மருத்துவமனையில் மரத்தின்கீழ் தூக்கி வீசப்பட்டார். அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# நீதிபதி இளஞ்செழியனின் வழக்கு; மே மாதத்துக்கு ஒத்திவைப்பு!

யாழ்ப்பாணம், ஏப். 27

நீதிபதி மா. இளஞ்செழியன் மீதான துப்பாக்கி சூடு வழக்கின் பிரதான சான்று பொருளான கைத்துப்பாக்கி அரச பகுப்பாய்வு பிரிவிடம் இருந்து மீள பெறப்படாததால் வழக்கு மே மாதத்துக்கு ஒத்திவைக்கப்பட்டது.

கடந்த 2017ஆம் ஆண்டு ஜூலை மாதம் 22ஆம் திகதி நீதிபதி இளஞ்செழியன் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கி சூட்டு சம்பவம் தொடர்பிலான வழக்கு விசாரணைகள் யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி டெனிஸ் சாந்தன் சூசைதாஸன் முன்னிலையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

அதன் போது , நீதிபதியின் மெய்ப்பாதுகாவலராக அக்காலத்தில் கடமையாற்றிய பொலிஸ் உத்தியோகத்தல் சாட்சியமளித்தார்.

இதன் போது, உங்கள் கைத்துப்பாக்கியை அடையாளம் காட்ட முடியுமா ? என அரச சட்டவாதி சாட்சியிடம் கேட்ட போது , “ஆம்” என பதிலளித்தார்.

ஆனால், குறித்த துப்பாக்கியை சாட்சி அடையாளம் காட்ட துப்பாக்கி மன்றில் இருந்திருக்கவில்லை. கைத்துப்பாக்கியை அரச பகுப்பாய்வு திணைக்களத்திடம் வழங்கப்பட்ட நிலையில், அது மீளப் பெறப்படவில்லை என்பது தெரியவந்தது.

இதையடுத்து, பிரதான சான்று பொருள் இல்லாது - விசாரணைகளை முன்னெடுக்க முடியாது என தெரிவித்த நீதிபதி வழக்கை எதிர்வரும் மே மாதம் 21ஆம் திகதி ஒத்திவைத்தார்.

அத்துடன் அரச பகுப்பாய்வு திணைக்களத்திடம் இருந்து கைத்துப்பாக்கியை மீள பெற்று, சான்று பொருளாக மன்றில் அதனை சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு நீதிபதி கட்டளையிட்டார். (ஐ)

# பெண் தலைமை குடும்பத்தின் தோட்டத்தை அழித்த விஷமிகள்!



கிளிநொச்சி, ஏப். 27

பெண் தலைமைத்துவ குடும்பத்தின் மிளகாய் தோட்டத்தை விஷமிகள் சிலர் அழித்துள்ளனர் என்று கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சி - கல்லாறு பிரதேசத்திலேயே நேற்று முன்தினம் இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஒரு ஏக்கர் விஸ்தீரணமுள்ள இந்த மிளகாய் தோட்டத்துக்குள் நுழைந்த விஷமிகள் மிளகாய் செடிகளை வெட்டியும் பிடுங்கியும் எறிந்துள்ளனர். அத்துடன், தூவல் நீர்ப்பாசனத்துக்காக அமைக்கப்பட்ட குழாயையும் உடைத்துள்ளனர்.

பெண் தலைமைத்துவ குடும்பத்துக்கு வாழ்வாதார தேவைக்காக வழங்கப்பட்ட உதவியில் அமைக்கப்பட்ட தோட்டமே இவ்வாறு அழிக்கப்பட்டுள்ளது.

முன்னர், இந்தக் குடும்பத்துக்கு சொந்தமான மாடு களவாடப்பட்ட நிலையில் அது தொடர்பில் பொலிஸாருக்கு முறைப்பாடு அளிக்கப்பட்டது. இதையடுத்து, இந்த சம்பவம் தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டார். இதற்கு பழிவாங்கும் நோக்கிலேயே விஷமிகள் குழு தோட்டத்தை அழித்ததாக அந்தப் பகுதியினர் குற்றஞ்சாட்டியுள்ளனர். (ஐ)

# நிரந்தர நியமனம் வழங்க நடவடிக்கை

கொழும்பு, ஏப். 27

உள்ளூராட்சி மன்றங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் சுற்றாடல் இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கும் இடையில் நேற்று முன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் கலந்துரையாடல் நடைபெற்றது.

கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

இதன்படி, உள்ளூராட்சி நிறுவனங்களில் உள்ள 8 ஆயிரத்து 00 ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படும் என்றும அவர் கூறினார். (ஐ)

# ஈஸ்டர் தாக்குதல் சஹ்ரான் சுரேஷ் சாலேயின் வளர்ப்பு

## சரத் பொன்சேகா எம். பி.

கொழும்பு, ஏப். 27

**உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலில் ஈடுபட்ட சஹ்ரான் ஹாசிமை வளர்த்து விட்டவர் அரச புலனாய்வு பிரிவின் முன்னாள் பணிப்பாளர் சுரேஷ் சாலே என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.**

சுரேஷ் சாலே தற்போது தனக்கும் இந்த விடயத்துக்கும் தொடர்பில்லை என காண்பிக்க முயன்றாலும் அவர் இதிலிருந்து தப்ப முடியாது. நான் பதவியிலிருந்த வேளை அவரை அரச புலனாய்வு பிரிவிலிருந்து நீக்கினேன். ஜனாதிபதியான பின்னர் கோட்டாபய ராஜபக்ச அவரை மீண்டும் அந்த பதவிக்கு நியமித்தார்.

சுரேஷ் சாலேயின் வலது கரமான பொனிபேஸ் பெரேரா கிழக்குக்கு பொறுப்பான இராணுவஅதிகாரியாக நியமிக்கப்பட்டார். சுரேஸ் சாலே என் மீது அவதூறு தெரிவித்தால் நான் இது தொடர்பான ஆவணத்தை சமூக ஊடகங்களில் வெளியிடுவேன். அது அவர் எப்படிப்பட்டவர் என்பதை வெளிப்படுத்தும்.



சஹ்ரான் ஹாசிமுடன் தொடர்பிலிருந்த இவ்வாறான நபர்களே கௌரவம்மிக்க வீரர்களாக சித்தரிக்கப்படுகின்றனர் - என்றும் அவர் கூறினார்.

# மருத்துவர் என்றுகூறி தங்க நகைகள் திருட்டு

குளியாப்பிட்டிய, ஏப். 27

கொழும்பு - குளியாப்பிட்டிய போதனா மருத்துவமனையில் வியாழக்கிழமை தனது தாயுடன் மருத்துவமனைக்குச் சென்ற சிறுவனின் தங்க நகைகளை மருத்துவர் போன்று நடித்து ஏமாற்றித் திருடிச் சென்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு திருடப்பட்ட தங்க நகைகள் சுமார் 3 இலட்சத்து 82 ஆயிரம் ரூபாய் பெறுமதியுடையது என பொலிஸார் கூறினர்.

அனுக்கனே குபுகொடுவ பிரதேசத்தைச் சேர்ந்த பெண் சிறுவனின் காலில் ஏற்பட்ட காயத்துக்கு சிகிச்சை பெற குளியாப்பிட்டிய போதனா மருத்துவமனைக்கு கூட்டிச் சென்றுள்ளார்.

இதன்போது, தன்னை மருத்துவர் எனக் கூறிய நபரொருவர் சிறுவனுக்கு ஸ்கேன் பரிசோதனை செய்ய வேண்டும் என்று, அவர் அணிந்திருந்த தங்க நகைகளை கழற்றி பையில் போடுமாறு கூறியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், இந்த நபர் மருத்துவமனையிலுள்ள கதிரையில் சிறுவனை அமரச் செய்து தங்க நகைகளுடன் தப்பிச் சென்றதாக உயர் பொலிஸ் அதிகாரி கூறினார். (எ)

# ஊழல் ஆணைக்குழுவில் ஜனாதிபதிக்கு எதிராக முறையிடுவதற்கு நடவடிக்கை!

## ஜே. வி. பி. மேற்கொள்கின்றது

கொழும்பு, ஏப். 27

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக லஞ்ச - ஊழல் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்ய ஜே. வி. பியின் கீழ் இயங்கும் சோசலிச இளைஞர் சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இளைஞர் சேவைகள் மன்றத்தின் சொத்துகளை அரசியல் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தியமை தொடர்பிலேயே இந்த முறைப்பாடு தாக்கல் செய்யப்படவுள்ளது.

இந்த முறைப்பாடு எழுத்து மூலம் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்படத் திட்டமிடப்பட்டுள்ளது.

எது எப்படி இருப்பினும், ஜனாதிபதி ஒருவருக்கு எதிராக அவர் பதவி வகிக்கும் காலத்தில் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய முடியாது என்பதுடன், வேறு விதமான சட்ட நடவடிக்கைகளையும் எடுக்க முடியாது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தேர்தல் நெருங்கும் நேரத்தில் மக்களை பகடைக்காயாக பயன்படுத்தாதீர்கள்!

## கர்தினால் ரஞ்சித்தை கோருகிறார் டயானா

கொழும்பு, ஏப். 27

தேர்தல் நெருங்கிவரும் சூழலில் கத்தோலிக்க மக்களை பகடைக்காயாக பயன்படுத்த வேண்டாம் - அரசியல் நிகழ்ச்சி நிரலில் சிக்க வேண்டாமென பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையிடம் கேட்டுக்கொள்கிறேன் என இராஜாங்க அமைச்சர் டயானா கமகே தெரிவித்தார்.

நேற்று வெள்ளிக்கிழமை அவர் பாராளுமன்றில் உரையாற்றியபோதே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "உரிய விசாரணைகள் ஊடாக அவர்களுக்கு தண்டனை வழங்கி இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வை வழங்கி முடிவுக்கு கொண்டுவர வேண்டும். தங்களிடம் உள்ள ஆதாரங்களை பொலிஸார், நீதிமன்றம், புலனாய்வுத் துறையினரிடம் கையளித்து பிரச்சினையை முடிவுக்கு கொண்டுவருமாறு எதிர்க்கட்சியிடம் கோருகிறேன்.

தேர்தல் நெருங்கிவரும் சூழலில் கத்தோலிக்க மக்களை பகடைக்காயாக பயன்படுத்த வேண்டாம். தற்போது இந்த விடயம் தொடர்பில் வெளிப்படுத்தப்படும் தகவல்களும், கருத்துகளும் தேர்தலை இலக்காக கொண்டதாகும். நாட்டு மக்களின் வாழ்க்கையுடன் விளையாட வேண்டாம். இவர்கள் சாதாரண அகிம்சையான மக்கள். அவர்களது எண்ணங்களுடனும் உணர்வுகளுடனும் விளையாட வேண்டாம். அரசியல் நிகழ்ச்சி நிரலில் சிக்க வேண்டாமென பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையிடம் கேட்டுக்கொள்கிறேன்.

கோட்டாபய ராஜபக்சவுக்கு வாக்களிக்குமாறு கடந்த காலத்தில் பேராயர் கோரியிருந்தார். தற்போது வேறு நபர்களுக்கு வாக்களிக்குமாறு கூறுகிறார். உங்கள் மக்களை அரசியலுக்காக பயன்படுத்த வேண்டாம்.

தேவாலயங்களையும் கத்தோலிக்க மக்களையும் பார்த்துக்கொள்ளுமாறு அவரிடம் கோருகிறோம். அரசியல்வாதிகள் அவர்கள் பணியை செய்வார்கள் என்பதுடன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவரது பணியை செய்வார் - என்றார். (ஐ)

# சட்டவிரோதமாக பொருத்தப்பட்ட 41 மோட்டார் சைக்கிள்கள் சிக்கின

கொழும்பு, ஏப். 27

சட்டவிரோதமாக பாகங்களாகக் கொண்டுவரப்பட்டு பொருத்தப்பட்ட 41 மோட்டார் சைக்கிள்களை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

ஊழல் ஒழிப்பு பிரிவின் அதிகாரி ஒருவரின் தகவலின் அடிப்படையில் குருநாகலில் நடத்தப்பட்ட சுற்றிவளைப்பில் இந்த மோட்டார் சைக்கிள்கள் கைப்பற்றப்பட்டன.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட மோட்டார் சைக்கிள்கள் சுமார் இரண்டு கோடி ரூபா பெறுமதியானவை என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# ஐ. ம. சு. கூட்டமைப்பின் கூட்டம்; நிமல் புறக்கணிப்பு;

கொழும்பு, ஏப். 27

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் கலந்துரையாடலில் நிமல் சிறிபால டிசில்வா தரப்பினர் புறக்கணித்தனர் என்று தகவல் வெளியாகியுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பினர் நேற்றுமுன்தினம் கூடி கலந்துரையாடல் ஒன்றை நடத்தியுள்ளனர்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திலங்க சுமதிபால தலைமையில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

இந்த கலந்துரையாடலில் நிமல் சிறிபால டி சில்வா உள்ளிட்ட தரப்பினருக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. எனினும், நிமல் சிறிபால டி சில்வா உள்ளிட்ட தரப்பினர் பங்கேற்கவில்லை. (ஐ)

# தனது சகோதரியை வன்புணர்ந்ததுடன் பிறருக்கும் விற்ற சகோதரன் கைது!

## யாழ்ப்பாணத்திலேயே இந்த அவலம்

யாழ்ப்பாணம், ஏப். 27

தனது சகோதரியை வன்புணர்ந்ததுடன், அவரை வலுக்கட்டாயமாக பாலியல் தொழிலில் ஈடுபடுத்தினார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

நல்லூர் பிரதேசத்தை அண்மித்த பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

மனநலம் பாதிக்கப்பட்ட பெண் வடமராட்சியில் பராமரிப்பு இல்லம் ஒன்றில் தங்கியிருந்த நிலையில் சகோதரன் தனது வீட்டுக்கு அழைத்துச் சென்றுள்ளார். அங்கு அவருக்கு போதை ஊசி செலுத்தி அவரை வன்புணர்ந்ததுடன், கட்டாயப்படுத்தி பாலியல் தொழிலிலும் தள்ளியுள்ளார்.

மீண்டும் அந்தப் பெண் பராமரிப்பு இல்லத்துக்கு திரும்பியநிலையில் இந்த விடயம் வெளியானது. இந்த சம்பவம் குறித்து யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணை நடத்திய நிலையில் அந்தப் பெண்ணின் சகோதரனை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இதேசமயம், அந்தப் பெண்ணை வன்புணர்ந்த 8 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்றும் அவர்களை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பல் விபத்து:

# வழக்கை விரைவாக முடிக்குமாறு உத்தரவு

கொழும்பு, ஏப். 27

எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பல் தீ விபத்து தொடர்பான விசாரணைகளை விரைவில் முடிக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு உத்தரவிட்டுள்ளது.

நேற்று முன்தினம் இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோதே இவ்வாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதன்போது, குற்றப் புலனாய்வு திணைக்களம் சார்பில் முன்னிலையான அரச சட்டத்தரணி, இந்த விசாரணைகள் தொடர்பான விவரங்களை முன்வைக்க ஒரு மாத கால அவகாசம் வழங்குமாறு கோரியுள்ளார்.

இந்நிலையில், முன்வைக்கப்பட்ட உண்மைகளை பரிசீலித்த நீதிவான் விசாரணைகளை உடனடியாக முடிக்குமாறு பொலிஸாருக்கு அறிவித்ததுடன், அதன் முன்னேற்றம் தொடர்பில் நீதிமன்றத்துக்குத் தெரிவிக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (ஐ)

# பொய் சாட்சியம் வழங்கிய மைத்திரியை கைது செய்க

## சபையில் கோரினார் கம்மன்பில

கொழும்பு, ஏப். 27

**தேசியப் பாதுகாப்பையும், நாட்டு மக்களையும் கேலிக் கூத்தாக்கி, இல்லாத பிரச்னையைத் தோற்றுவிக்கும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை கைது செய்ய வேண்டும். - இவ்வாறு பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.**



உயிர்த்த ஞாயிறு தின குண்டுத் தாக்குதலின் பிரதான சூத்திரதாரியை நான் அறிவேன் என்று குறிப்பிட்டுக் கொண்டு மைத்திரிபால சிறிசேன வழங்கிய சாட்சியத்தில் குறிப்பிட்டுள்ள விடயங்கள் பொய் என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்றும் கம்மன்பில குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை இடம்பெற்ற ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்கள் தொடர்பான சபை ஒத்திவைப்பு இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

குண்டுத் தாக்குதல்களின் உண்மை வெளிப்படுத்தப்பட வேண்டும்.
பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதில் எவ்வித மாற்றுக் கருத்தும் இல்லை. ஆனால் பாதிக்கப்பட்டவர்களை அடையாளப்படுத்தி அரசியல் இலாபம் தேட ஒரு தரப்பினர் முயற்சிப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது.

இந்த விவாதத்தில் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகளின் பெயர், பாதுகாப்பு விவகாரங்களுடன் தொடர்புடைய தகவல்கள் குறிப்பிடப்படுவதை அவதானிக்க முடிகிறது.

யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர் நாட்டின் புலனாய்வுப் பிரிவு பலவீனப்படுத்தப்பட்டது. நல்லாட்சி அரசாங்கம் அரசியல் நோக்கங்களுக்காக இராணுவத்தையும், புலனாய்வுப் பிரிவையும் காட்டிக் கொடுத்தது. இதனைப் பயங்கரவாதி சஹ்ரான் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டான்.

மைத்திரிபால சிறிசேன இங்கு பற்றி பேசாமல் இருப்பது இந்த விவாதத்தில் காணப்படும் பிரதான குறைபாடாகும். உண்மையான சூத்திரதாரியை நான் அறிவேன் என்று மைத்திரி குறிப்பிட்டார். எனவே மைத்திரியை முதலில் கைது செய்யுமாறு வலியுறுத்தினோம். ஆனால் கைது செய்யப்படவில்லை.

பயங்கரவாதத் தாக்குதல்கள் மற்றும் செயல்பாடுகள் பற்றி அறிந்தும் அதனை மறைப்பது பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் 07 வருட கால கடூழியச் சிறைத் தண்டனைக்குரிய குற்றமாகும்.- என்றார் கம்மன்பில.

சிரேஷ்ட பிரஜைகளுக்கு

# 15 வீத வட்டியை வழங்க ரூ. 40 பில்லியன் தேவை



கொழும்பு, ஏப். 27

சிரேஷ்ட பிரஜைகளுக்கான வட்டியை 15 வீதமாக வழங்க வேண்டுமானால் அரசாங்கம் மேலும் 40 பில்லியன் ரூபாயை அதற்காகச் செலுத்த நேரிடும். அரசாங்கத்தின் தற்போதைய நிதி நிலைமையைக் கவனத்தில் கொண்டு அது தொடர்பில் உரிய கவனம் செலுத்தப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தற்போது வங்கி வட்டி வீதம் தொடர்பில் பிரச்னைகள் எழுந்துள்ளன. கடனுக்கான வட்டி அதிகரிக்கப்பட்டு வங்கி வைப்புக்கான வட்டியை 16 வீதத்திலிருந்து தனி இலக்கத்துக்குக் கொண்டு வந்துள்ளோம். வைப்புக்களுக்கான வட்டியைக் குறைப்பது இயல்பாக இடம்பெறுகின்ற ஒன்று. அது தொடர்பில் சிரேஷ்ட பிரஜைகளும் சில பாதிப்புக்களை எதிர்கொள்ள நேர்ந்துள்ளது.

அதேவேளை, சிரேஷ்ட பிரஜைகள் முகம் கொடுக்கும் மற்றுமொரு பிரச்னை ஒரு இலட்சம் ரூபாய்க்கு குறைவாகப் பணத்தை வைப்புச் செய்வது. அவ்வாறான பிரச்னைகளுக்கு நாம் நடவடிக்கை ஒன்றை எடுத்தோம். எனினும் அது சாத்தியப்படவில்லை.

சிரேஷ்ட பிரஜைகளின் வங்கி வைப்புக்களுக்கு வட்டி அதிகரிக்க வேண்டியது அவசியம். எனினும் அதற்கான நிதியை அரசாங்கமே ஒதுக்க வேண்டியுள்ளது. இவ்வாறான விடயங்களுக்காக ஏற்கனவே வங்கிக்கு அரசாங்கம் வழங்க வேண்டிய நிலுவை இன்னும் தொடர்கிறது.

நீண்ட காலமாக இவ்வாறு சிரேஷ்ட பிரஜைகளுக்கு அதிக வட்டியை வழங்குவதற்கு அரசாங்கமே வங்கிகளுக்கு நிதி வழங்கி வந்துள்ளது. - என்றார். (எ)

# கேகாலை மருத்துவமனையில் சமையல் பொருட்கள் திருட்டு!

கேகாலை, ஏப். 27

கேகாலை பொது மருத்துவமனையின் சமையல்காரர் ஒருவர் 4,00ழ ரூபாய் பெறுமதியான சமையல் பொருட்களைத் திருடும்போது மருத்துவமனை அதிகாரிகளால் பிடிபட்டதாக கேகாலை பொலிஸார் தெரிவித்தனர்.

திருடப்பட்ட சமையல் பொருட்களை கேகாலை பொலிஸாரிடம் ஒப்படைத்த கேகாலை பொது மருத்துவமனையின் பணிப்பாளர் இந்த சம்பவம் தொடர்பில் வியாழக்கிழமை மாலை முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

கேகாலை பொது மருத்துவமனையின் அதிகாரிகள் மருத்துவமனையைச் சுற்றி பார்வையிட்டபோது இந்த சமையல்காரர் கையில் ஒரு பையுடன் பிரேத அறையை நோக்கி ஓடுவதை அவதானித்தனர்.

பின் தொடர்ந்த அதிகாரிகள் இவரைப் பிடித்துச் சோதனையிட்ட போது பழங்கள், மீன்கள் மற்றும் உருளைக்கிழங்குகள் போன்ற சமையல் பொருட்கள் கைப்பற்றப்பட்டன.

இந்த திருட்டு சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# உலக பொருளாதார பேரவை கூட்டத்தில் அலி சப்ரி பங்கேற்பு

கொழும்பு, ஏப். 27

உலக பொருளாதாரப் பேரவையின் உலகளாவிய ஒத்துழைப்பு, வளர்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான வலுத்திறன் தொடர்பான விசேட கூட்டத்தில் பங்கேற்பதற்காக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி சவுதி அரேபியாவுக்குப் பயணமாகவுள்ளார்.

உலக பொருளாதாரப்பேரவையின் ஏற்பாட்டில் சவுதி அரேபியாவின் ரியாத் நகரில் எதிர்வரும் 28 - 29 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. இவ் விசேட கூட்டமானது உலகளாவிய ரீதியில் பல்துறைசார் பிரதிநிதிகளையும், தொழிற்துறை தலைவர்களையும் ஒன்றிணைக்கும்.

உடனடியாகத் தீர்வு காணப்படவேண்டிய சிக்கலான பிரச்னைகள் தொடர்பில் விரிவான கலந்துரையாடலை முன்னெடுப்பதற்கு வாய்ப்பளிக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுவதாக வெளிவிவகார அமைச்சர் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் "நகர்ப்புற எதிர்காலத்தைக் கட்டியெழுப்புதல்" மற்றும் "வடக்கிலிருந்து தெற்கு - கிழக்கிலிருந்து மேற்கு: நம்பிக்கையை மீளக் கட்டியெழுப்புதல்" ஆகிய தலைப்புக்களில் நடைபெறவுள்ள இரு அமர்வுகளில் அமைச்சர் அலி சப்ரி பங்கேற்கவுள்ளார்.

சவுதி அரேபியா மற்றும் ஏனைய நாடுகளின் உயர்மட்டப் பிரதிநிதிகளுடன் அமைச்சர் அலி சப்ரி இருதரப்பு சந்திப்புக்களையும் நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. அது மாத்திரமன்றி ரியாத்தில் வாழும் இலங்கையர்களையும் அவர் சந்திக்கவுள்ளார். (எ)

# குரங்குகளின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்த கருவி கண்டுபிடிப்பு

கொழும்பு, ஏப். 27

குரங்குகளின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்த வளையம் வடிவிலான புதிய கருப்பை கருவியை பேராதனை பல்கலைக் கழகத்திலுள்ள கால்நடை மருத்துவபீடம்அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்தக் கருவி பெண் குரங்களின் கருப்பையில் கருவுறுவதைத் தடுக்கும்.

இக் கருவி ஒருமுறை குட்டி ஈன்ற ஒன்றரை வயது பெண் குரங்குக்கு சோதனைக்காக பயன்படுத்தப்பட்டது.

சோதனையின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட கதிரியக்க பரிசோதனையில் கருப்பையில் பொருத்தப்பட்ட கருவி வெற்றிகரமாக செயல்பட்டுள்ளதை அவதானித்ததாக பேராதனை பல்கலைக்கழகத்தின் கால்நடை மருத்துவ பீடத்தைச் சேர்ந்த சிரேஷ்ட பேராசிரியர் அசோக



தங்கொல்ல தெரிவித்தார்.

பெண்களுக்கு கர்ப்பம் தரிப்பதை தடுக்கும் நடைமுறையிலுள்ள சாதாரண அளவிலான கருவியைப் பயன்படுத்திய போது அது தோல்வியடைந்தது. அதனால் சிறிய அளவிலான வளையத்தை உருவாக்க முடிவு செய்தோம் என அவர் கூறினார்.

இந்த வளையம் வடிவிலான புதிய கருப்பை கருவியை உற்பத்தி செய்ய 2000 ரூபாய் செலவாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# உரையாற்றக்கூடாது என்று எனக்கு உயிர் அச்சுறுத்தல்!

## சபாநாயகரிடம் வேலுகுமார் எம். பி. முறைப்பாடு

கொழும்பு, ஏப். 27

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர்களுக்கு எதிராக நான் பாராளுமன்றத்தில் உரையாற்றக்கூடாது என்று தனக்கு உயிர் அச்சுறுத்தல் விடுத்தனர் என தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர் எம். வேலுகுமார் தெரிவித்தார்.

இந்த அச்சுறுத்தலானது பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கான அச்சுறுத்தலாக அன்றி ஜனநாயக உரிமைகள் மற்றும் பாராளுமன்றத்தில் கருத்துக் கூறும் உரிமைக்கு எதிரான அச்சுறுத்தலாகவே கருதுகிறேன் என்றும் கூறினார்.

தனக்கு உயிர் அச்சுறுத்தல் விடுத்தவர்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து நீதியைப் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வேலுகுமார் எம். பி. சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் கோரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அமர்வின்போது சிறப்புரிமை பிரச்னையை முன்வைத்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வன்முறையாளர்களால் பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரல கொல்லப்பட்ட சம்பவத்தை இவ்விடத்தில் நினைவுபடுத்துகின்றேன். நான் இந்த சம்பவத்தையும் அவ்வாறே பார்க்கின்றேன். இது தொடர்பில் நான் மத்திய மாகாண பொலிஸாருக்கு முறைப்பாட்டை முன்வைத்துள்ளேன். ஆனால், முறையாக நடவடிக்கை எடுக்கப்படுவதாக நான் திருப்தியடையவில்லை.

எனக்கு அச்சுறுத்தல் விடுத்த இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் உபதலைவர் செல்லமுத்துவின் மகன் செல்வச்சந்திரன் பெருந்தோட்ட நிறுவனமொன்றில் பணியாற்றுகின்றார். அவருக்காகப் பெரும் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. தோட்ட நிறுவனத்தின் உத்தியோகபூர்வ வீடொன்றிலேயே வசிக்கின்றார். இதனால் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும், பெருந்தோட்ட நிறுவனமும் அவர்கள் தொடர்பில் கதைப்பதால் செய்யும் அச்சுறுத்தலாகவே பார்க்கின்றேன்.

நாங்கள் வன்முறை கலாசாரத்தையும் வன்முறை அரசியலையும் எதிர்க்கின்றோம். கருத்துச் சுதந்திரத்தை மதிக்கின்றோம். என்னிடம் கல்வி கற்ற சமூகம் இருக்கிறது. என்னிடம் அடியாட்கள் இல்லை. கூலிக்கு அரசியல் செய்பவர்கள், அரசியலுக்கு விலைபோகிறவர்கள் இல்லை. என்னை ஜனநாயக வழியில் செயல்பட இடமளியுங்கள். இதேவேளை எனது அடிப்படை உரிமை மற்றும் பாராளுமன்ற சிறப்புரிமைக்குத் தடையாக இருந்தவர்களுக்கு எதிராகச் சட்டத்தை நடைமுறைப்படுத்தி நீதியைப் பெற்றுத் தருமாறு சபாநாயகரிடம் கோருகின்றேன்- என்றார். (எ)

# தமிழ் தேசிய கட்சிகள் ஒரே குரலில் ஒன்றை கேட்கமுடியாத சூழ்நிலை!

## அரியநேத்திரன் கவலை

மட்டக்களப்பு, ஏப். 27

**தமிழ்த் தேசிய கட்சிகள் ஒருமித்து ஒரே குரலில் ஒரு விடயத்தை கேட்கமுடியாத சூழ் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன - இவ்வாறு இலங்கை தமிழ் அரசு கட்சியின் மூத்த உறுப்பி னரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான பா. அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.**

இலங்கை தமிழ் அரசு கட்சி யின் நிறுவுநர் தந்தை செல்வா வின் 47ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று மட்டக்களப்பில் அனுஷ்டிக்கப்பட்டது.

இலங்கை தமிழ் அரசு கட்சி யின் மட்டக்களப்பு மாவட்ட இளைஞர் அணியின் ஏற்பாட் டில் தந்தை செல்வா நினைவுப் பூங்காவில் நடைபெற்ற நிகழ் வில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். (ஐ)

# மண்முனை வடக்கு பிரதேச செயலக விளையாட்டு விழா!

மட்டக்களப்பு, ஏப். 27

மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கழகங்க ளுக்கு இடையிலான விளை யாட்டு விழாவின் ,றுதி நாள் நிகழ்வு நேற்றுமுன்தினம் நடை பெற்றது.

மட்டக்களப்பு வெபர் விளை யாட்டு மைதானத்தில் மண் முனை வடக்கு பிரதேச செய லாளர் வி. வாசுதேவன் தலை மையில் இந்த நிகழ்வு நடை பெற்ற.

இதில் கிழக்கு மாகாண சிரேஷ்ட விளையாட்டு உத்தி யோகத்தர் ஈஸ்பரன் பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

விளையாட்டின் மூலம் உடல் ஆரோக்கியத்தினை பேணவும் விளையாட்டின் ஊடாக பிர தேச செயலகத்திற்கும் பொது மக்களுக்குமான உறவினை வலுப்படுத்துவதை நோக்காக கொண்டு ,ந்த விளையாட்டு நிகழ்வுகள் ஏற்பாடுசெய்யப்பட் டிருந்தன. (ஐ)



# பாதையை சீரமைக்குமாறு தனிமனிதர் போராட்டம்!

ஓட்டமாவடி, ஏப். 27

ஓட்டமாவடி சுற்றுவட் டத்தை அண்மித்து நீண்டகா லமாக சீரின்றிக் காணப்படும் ரயில் பாதை கடவையை புனர மைக்குமாறு கோரி தனிமனிதர் நேற்று போராட்டத்தில் ஈடுபட் டார்.

ஓட்டமாவடி சுற்றுவட் டத்தை அண்மித்துள்ள புகையி ரத கடவை அருகே நேற்று அவர் போராட்டத்தில் ஈடுபட்டார்.

அவர் கழுத்தில் தொங்க விட்டிருந்த பதாதையில்,

"ஊருக்கு சொந்தமான பிரதேச செயலாளர் உண்டு" ஊரின் அக்கறையில் கவனம் செலுத்தும் சமூக நலன் விரும்பி கள் உண்டு. எத்தனையோ கால மாக இந்த இடம் சேதமடைந் துள்ளது. இதனால் பல நூறு பேர்கள் பயணிக்கும் முக்கிய மான ஓர் இடம். இதை சீர் செய்ய பலரிடம் பேசியும் பல னளிக்கவில்லை. இது ஏன் எந்த வோர் அதிகாரியின் கண்ணி லும் படவில்லை. இதை சீர் செய்ய அனுமதி தாருங்கள். இல்லா விட்டால் இதை சீர் செய்து தாருங்கள் அன்புள்ள அதிகாரிகளே!", என்று எழுதி யிருந்தார். (ஐ)

# தந்தை செல்வா நினைவேந்தல் மட்டக்களப்பில் அனுஷ்டிப்பு!

மட்டக்களப்பு, ஏப். 27

இலங்கை தமிழ் அரசு கட்சி யின் நிறுவுநர் தந்தை செல்வா வின் 47ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று மட்டக்களப்பில் அனுஷ்டிக்கப்பட்டது.

இலங்கை தமிழ் அரசு கட்சி யின் மட்டக்களப்பு மாவட்ட இளைஞர் அணியின் ஏற்பாட் டில் கே. சோபனன் தலைமை யில் தந்தை செல்வா நினைவுப் பூங்காவில் இந்த நிகழ்வு நடை பெற்றது.

இந்த நிகழ்வில் மட்டக்க ளப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்க ளான கி. துரைராஜசிங்கம், பா. அரியநேத்திரன், ஞா. சிறிநே சன், மட்டக்களப்பு மாவட்ட மகளிர் அணி செயலாளர் செல்வி தயாளகௌரி உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது தந்தை செல் வாவின் சிலைக்கு சூரிய மின்க



லம் கி. துரைராஜசிங்கத்தின் ஏற்பாட்டில் பொருத்தப்பட்டு திறந்துவைக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு மலர் அஞ்சலி செலுத்தப்பட்ட துடன் ஈகைச்சுடர் ஏற்றப்பட்டு அகவணக்கம் செலுத்தப்பட் டது. தொடர்ந்து தந்தை செல்வா அவர்கள் தொடர்பான நினைவு உரைகளும் நடைபெற்றன. (ஐ)

# தென்கிழக்கு பல்கலையால் நூலகங்களுக்கு புத்தகங்கள்

அக்கரைப்பற்று, ஏப். 27


தென்கிழக்கு பல்கலைக்கழ கத்தை சமூகத்துடன் இணைத் தல் என்ற நிகழ்ச்சித் திட்டத் தின் கீழ் பொது நூலகங்களை வலுப்படுத்த 8 நூலகங்களுக்கு நூல்கள் அன்பளிப்பு செய்யப் பட்டன.

துணைவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் தலைமையில் பல்கலைக்கழக நூலகர் எம். எம். றிபாயுத்தீனின் ஆலோச னையில் நடைமுறைப்படுத்தப் பட்டது.

உலக புத்தக தினத்தை முன் னிட்டு நடைமுறைப்படுத்தப் பட்ட இந்தத் திட்டத்தில் நிந்த



வூர் பொது நூலகம், சாய்ந்தம ருது பொது நூலகம், வாசிப்பு நிலையம் வீரமுனை, பொது நூ லகம் ஒலுவில், அல்ஹம்றா வித் தியாலயம் ஒலுவில், சம்மாந் துறை அமிர்அலி வித்தியால யம், மருதமுனை அல்மனார் தேசிய பாடசாலை நூலகம், அட்டாளைச்சேனை பொதுநூ லகம் என்பவற்றுக்கு 733 நூ ல்கள் வழங்கி வைக்கப்பட்டன. (ஐ)




# காஸா சிறுவர் நிதியத்துக்காக 50 இலட்சம் ரூபாய் நன்கொடை

கல்முனை, ஏப். 27

ஜனாதிபதியின் காஸா சிறு வர் நிதியத்துக்கு 50 இலட்சம் ரூபாயை கல்முனை பிராந்திய பொது நிறுவனங்கள் அன்ப ளிப்பு செய்தன.

இந்த நிதி நேற்று வெள்ளிக் கிழமை ஜனாதிபதி செயலகத் தில் வைத்து ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

காஸா சிறுவர்களின் நல திட்டத்துக்காக கல்முனை கல்வி வலய உத்தியோகத்தர் கள், அதிபர், ஆசிரியர்கள், கல்வி சாரா ஊழியர்களின் பங்களிப்பில் 31 இலட்சத்து 28 ஆயிரத்து 500 ரூபாயும் கல் முனை ஹுதா ஜும்மா பள்ளி வாசல் சார்பில் நிர்வாகிகள், பொதுமக்களிடமிருந்து அன்ப ளிப்பாக கிடைத்த 15 இலட் சத்து 89 ஆயிரம் ரூபாயும், ஸ்போர்ட்ஸ் பெர்ஸ்ட் பௌண் டஷன் சார்பில் வழங்கப்பட்ட 3 இலட்சம் ரூபாயுமாக 50 இலட்சம் ரூபாய் ஜனாதிபதியி டம் வழங்கப்பட்டது. (ஐ)

# வெப்ப சமநிலையை பேண கண்டல் தாவரங்கள் நடுகை

கிண்ணியா, ஏப். 27

வெப்ப சமநிலையை ஏற்படுத்துவதற்காக கிண் ணியாவில் கண்டல் தாவரங்கள் நடுகைதிட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவு உட்பட்ட உப்பாறு, பைசல் நகர் போன்ற கிராம உத்தியோ கத்தர் பிரிவுகளில் இந்த கண்டல் தாவரங்கள் நடுகை செய்யப்பட்டன.

அதிகரித்து வருகின்ற உலக வெப்ப நிலைக்கு வெப்பச் சமநிலையை ஏற்படுத்துவதற்காகவும் குறித்த பகுதிகளில் சுற்றுச்சூழலை அழகு படுத்து வதற்காகவும் உள்ளூர் மற்றும் வெளியூர் சுற்றுலா பயணிகளை கவரக்கூடிய வகையில் இத்திட்டம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் அதிகாரிகள், இளைஞர்கள்,



பொதுமக்கள் எனப் பலர் பங்கேற்றனர். (ஐ)

# வெள்ளக்காடானது கென்யா ஒரு இலட்சம் பேர் பாதிப்பு!

## 38 பேர் உயிரிழப்பு

நைரோபி, ஏப். 27

**கென்யாவில் பெய்து வரும் கனமழை மற்றும் வெள்ளத்தில் சிக்கி 38 பேர் உயிரிழந்தனர். கனமழையால் கென்யா முழுவதும் வெள்ளக்காடாகக் காட்சியளிக்கிறது. அத்தோடு ஒரு இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் தங்கள் வீடுகளை இழந்து நிர்க்கதியாகியுள்ளனர்.**

கிழக்கு ஆபிரிக்க நாடான கென்யாவில் கடந்த மாதம் முதல் கனமழை பெய்து வருகிறது. கடந்த வாரம் திடீரென ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் பலர் அடித்துச் செல்லப்பட்டனர்.

ஆபிரிக்க நாடுகளில் பெய்து வரும் கனமழையால் அங்கு மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. வீதிகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடுவதால் நகரின் சில பகுதிகள் துண்டிக்கப்பட்டன.

கனமழையால் நாடு முழுவதும் 23 மாவட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. ஒரு இலட்சத்து 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் தங்கள் வீடுகளை இழந்துள்ளனர். 27 ஆயிரத்து 716 ஏக்கருக்கும் அதிகமான பயிர்ச் செய்கை நிலங்கள் அழிந்தன. சுமார் 5,000 கால்நடைகள் உயிரிழந்ததாக தகவல் வெளியானது.



கென்யாவில் வரலாறு காணாத கனமழை பெய்துள்ளது என்றும் சில பகுதிகளில் ஒரே நாளில் 200 மில்லி மீற்றர் வரை மழை பெய்துள்ளது என்றும் கென்யா வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வெள்ளம் அதிகமுள்ள பகுதிகளில் வசிப்பவர்களை மேடான பகுதிகளுக்குச் செல்லுமாறு அதிகாரிகள் அறிவுறுத்தினர். இதேவேளை, மீட்புப் பணிகள் முழுவீச்சுடன் நடைபெற்று வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர். (ஏ)

# மதுபான கொள்கை ஊழலில் முக்கிய சதிகாரர் கெஜ்ரிவால்



டில்லி, ஏப். 27

மதுபான கொள்கை ஊழல் வழக்கில் முக்கிய சதிகாரர் டில்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் என உச்ச நீதிமன்றத்தில் சட்ட அமுலாக்கத்துறை பதில் மனுத் தாக்கல் செய்தது.

டில்லி திஹார் சிறையில் நீதிமன்ற காவலிலுள்ள டில்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில், தன் மீதான கைது நடவடிக்கை சட்டவிரோதம் என்று கூறியிருந்தார். இதற்கு அமுலாக்கத் துறை தாக்கல் செய்த 734 பக்க பதில் மனுவில் கூறியிருப்பதாவது:

மதுபான கொள்கை ஊழல் வழக்கில் முக்கிய சதிகாரர் டில்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால். அவர் தனது அமைச்சர்கள், ஆம் ஆத்மி கட்சியின் தலைவர்களுடன் சேர்ந்து, தாங்கள் அளித்த சலுகைக்கு கைமாறாக மதுபான தொழில் செய்பவர்களிடமிருந்து இலஞ்சம் வாங்கியுள்ளார். நிதி மோசடி தடுப்புச் சட்டத்தில் சாதாரண நபரை கைது செய்வதற்கும் முதல்வரை கைது செய்வதற்கும் வெவ்வேறான விதிமுறை இல்லை.

முதல்வர் என்ற காரணத்தால் அவர் சிறப்பு சலுகை கோருவதை ஏற்க முடியாது. அவரைக் கைது செய்தது, நியாயமான தேர்தல் என்ற அடிப்படை அமைப்பு விதி முறைக்கு எதிரானது அல்ல. தேர்தலில் வாக்குச் சேகரிக்க வேண்டும் என கெஜ்ரிவால் கூறும் காரணத்தை ஏற்றுக் கொண்டால், குற்றவாளிகளாக இருக்கும் அரசியல்வாதிகளுக்கு கைது நடவடிக்கையிலிருந்து பாதுகாப்பு அளிக்க வேண்டிய தேவை ஏற்படும்.

அரவிந்த் கெஜ்ரிவால் மீதான குற்றத்தில் போதிய ஆவணங்கள் விசாரணை அதிகாரியிடம் இருந்ததால் அவர் கைது செய்யப்பட்டார். - இவ்வாறு அமுலாக்கத்துறை பதில் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஏ)

# இந்தியா பற்றி மோசமான புரிதல்

## அமெரிக்க அறிக்கைக்கு கண்டனம்

டில்லி, ஏப். 27

இந்தியாவைப் பற்றிய மோசமான புரிதலை அமெரிக்கா வெளியிட்டுள்ள அறிக்கை பிரதிபலிக்கிறது என்று இந்தியா கடுமையாக எதிர்வினையாற்றியுள்ளது.

அமெரிக்க வெளியுறவுத்துறையின் '2023 ஆம் ஆண்டின் மனித உரிமைகள்' அறிக்கையில் இந்தியாவின் மணிப்பூரில் நடந்த வன்முறை மற்றும் கனடாவில் ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொலை போன்ற சம்பவங்களில் இந்தியாவை முன்வைத்து மனித உரிமை மீறல்கள் அதிகரித்திருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் நீதிக்குப் புறம்பான கொலைகள், பலவந்தமாக காணாமல் போதல், கடுமையான சிறைவாசம், தன்னிச்சையான கைது, நாடு கடந்த அடக்குமுறை ஆகியவை அடங்கும்.

அரசாங்க அதிகாரிகள் அல்லது கொள்கைகளை விமர்சித்ததால் பழிவாங்கல், தவறான தகவல் மூலம் தாக்குதல் மற்றும் சமூக ஊடகங்களைப் பிரசாரத்துக்கு சுதந்திரமாகப் பயன்படுத்த இயலாமை உள்ளிட்ட எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்களால் முன்வைக்கப்பட்ட முறைப்பாடுகள் குறித்தும் அமெரிக்காவின் அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

மணிப்பூரில் 175 பேரின் மரணத்துக்கு வழிவகுத்த இன வன்முறையை அமெரிக்க அறிக்கை பிரதானமாக சுட்டிக்காட்டியுள்ளது. வீடுகள், வணிகங்கள் மற்றும் வழிபாட்டுத் தலங்களை அழித்ததோடு, ஆயுத மோதல், வன்புணர்வு மற்றும் தாக்குதல்கள் பற்றிய அமெரிக்காவின் புள்ளி விவரங்களை அமெரிக்க வெளியுறவுத்துறை மேற்கோள் காட்டியுள்ளது.

அமெரிக்காவின் இந்த அறிக்கைக்கு இந்திய வெளியுறவு அமைச்சகத்தின் அதிகாரபூர்வ செய்தித் தொடர்பாளர் ரந்தீர் ஜெய்ஸ்வால் கடும் கண்டனம் வெளியிட்டுள்ளார். "ஆழ்ந்த பக்கச்சார்பானது மற்றும் இந்தியாவைப் பற்றிய மோசமான புரிதலை இது பிரதிபலிக்கிறது. நாங்கள் இதற்கு எந்த மதிப்பையும் கொடுக்கவில்லை" என்று அமெரிக்க அறிக்கையை பொருட்படுத்தாது இந்தியா புறக்கணித்துள்ளது. (ஏ)

# வெள்ளை மாளிகையின் அருகில் வெடித்தது பெரும் போராட்டம்!

வாஷிங்டன், ஏப். 27

அமெரிக்காவின் வெள்ளை மாளிகைக்கு அருகில் பல்கலைக் கழக மாணவர்கள் பலஸ்தீனத்துக்கு ஆதரவு தெரிவித்து தொடர் போராட்டங்களில் ஈடுபட்டுள்ளனர்.

அமெரிக்காவின் ஜோர்ஜ்டவுன் பல்கலைக்கழக மாணவர்கள் வாஷிங்டனில் ஜோர்ஜ் வாஷிங்டன் பல்கலைக்கழகத்துக்கு அருகில் பலஸ்தீனத்துக்கு ஆதரவான போராட்டங்களில் ஈடுபட்டுள்ளனர்.

காஸா யுத்தத்தின் மத்தியில் பலஸ்தீனத்துக்கு ஆதரவு தெரிவிப்பதற்காகவும் அமெரிக்கப் பல்கலைக்கழகங்கள் இஸ்ரேலின் மனித உரிமை மீறல்களில் தங்களுக்குள்ள தொடர்பை முறித்துக்கொள்ள வேண்டும் என வேண்டுகோள் விடுப்பதற்காகவும் வாஷிங்டனை சேர்ந்த மாணவர்களும் பேராசிரியர்களும் செயல்பாட்டாளர்களும் அங்கு அணி திரண்டுள்ளனர்.

அமெரிக்காவின் ஏனைய பல்கலைக்கழகங்களைப் போன்று ஜோர்ஜ் வாஷிங்டன் பல்கலைக்கழகத்திலும் மாணவர்கள் வளாகத்தில் கூடாரம் அமைத்து தங்கியிருந்து போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.



வெள்ளை மாளிகைக்கும் இராஜாங்கத் திணைக்களத்துக்கும் அருகில் இந்தப் போராட்டங்கள் தொடர்கின்றன.

"தலைநகரில் நாங்கள் எதனையாவது செய்யாவிட்டால், நாங்கள் எங்கள் தார்மீகக் கடப்பாடுகளை நிறைவேற்றவில்லை என்பதே அர்த்தம்" என்று போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பல்கலைக்கழக மாணவி வெசெல்ஸ் தெரிவித்தார். (ஏ)

# போர் குற்றங்களுக்காக இஸ்ரேலை கண்டிக்கிறேன்

## மலாலா யூசுப்சாய் உறுதி

லண்டன், ஏப். 27

சர்வதேச சட்டங்களை மீறியதற்காகவும், போர்க் குற்றங்களுக்காகவும் இஸ்ரேலை நான் கண்டிக்கிறேன். காஸாவில் வசிக்கும் பலஸ்தீனர்களுக்கான எனது ஆதரவில் உறுதியாக உள்ளேன். - இவ்வாறு நோபல் பரிசு பெற்ற மலாலா யூசுப்சாய் தெரிவித்தார்.

அமெரிக்காவின் முன்னாள் வெளியுறவு அமைச்சர் ஹிலாரி கிளிண்டனுடன் இணைந்து தயாரித்த பிராட்வே இசைக்கு பாகிஸ்தானில் எதிர்ப்பு எழுந்துள்ள நிலையில் மலாலா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

எக்ஸ் பக்கத்தில் மலாலா வெளியிட்டுள்ள பதிவில், "காஸா மக்களுக்கான எனது ஆதரவில் எந்தவித குழப்பமும் இருக்கக் கூடாது என்று நான் விரும்புகிறேன். போர் நிறுத்தம் அவசியம், அவசரம் என்று புரிந்து கொள்வதற்கு இன்னும் அதிகமான இறப்புக்கள், குண்டு வீசப்பட்ட பாடசாலைகள் மற்றும் பசியால் வாடும் குழந்தைகள் அவசியம் இல்லை. சர்வதேச சட்டங்களை மீறியதற்காகவும், போர்க் குற்றங்களுக்காகவும் இஸ்ரேலை நான் கண்டிக்கிறேன். தொடர்ந்து கண்டிப்பேன்" என்று கூறினார்.



### தவறான பொருளாதார கொள்கை

# ராஜபக்ஷவினரிடம் ரூ. 5 கோடி இழப்பீடு கோரிய தொழிலதிபர்!

கொழும்பு, ஏப். 26

**முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ,மகிந்த ராஜபக்ஷ, பஸில் ராஜபக்ஷ, முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் ஆகியோரிடம் 5 கோடி ரூபாய் நட்டஈடு கோரி தொழிலதிபர் ஒருவர் கடிதம் அனுப்பியுள்ளார்.**

வட்டியுடன் கூடிய பணத்தை இரண்டு வாரங்களுக்குள் செலுத்தத் தவறும் பட்சத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று தொழிலதிபர் காலிங்க சில்வா தனது சட்டத்தரணி மூலம் அனுப்பிய கடிதத்தில் எச்சரித்துள்ளார்.

ஒருமுறை பாவனைக்கு உட்படுத்தக்கூடிய சுகாதார பொருட்கள் உற்பத்தியை மேற்கொண்டுவரும் குறித்த தொழிலதிபர்,

2019 - 2022 ஆம் ஆண்டுக்குள் தவறான பொருளாதாரக் கொள்கையால் தனது வணிக நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டன. இதனால், 5 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டது என்று கூறியுள்ளார்.

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின்ன் பெறுமதி வீழ்ச்சி, இறக்குமதி பொருட்களுக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள், நாளாந்த மின்வெட்டு போன்றவற்றால் தமது வர்த்தகம் பாதிக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

இந்த நட்டத்துக்கான பொறுப்பை முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, மகிந்த ராஜபக்ஷ, பஸில் ராஜபக்ஷ, முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் ஆகியோரே ஏற்க வேண்டும். அவர்கள் மீதான பொது நம்பிக்கையும் மீறப்பட்டுள்ளது என்றும் தொழிலதிபர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஐ)

# கல்வியியல் கல்லூரிகளுக்கு 60 ஆயிரம் பேர் விண்ணப்பம்

கொழும்பு, ஏப். 27

கல்வியியல் கல்லூரிகளுக்கான புதிய ஆட்சேர்ப்புக்காக 60 ஆயிரம் பேர் விண்ணப்பித்துள்ளனர் என்று கல்வியமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த தெரிவித்தார்.

இதன் பணிகள் அடுத்த வாரத்துக்குள் ஆரம்பிக்கப்படும். மேலும், கல்வியியல் கல்லூரி பயிற்சி முடித்த 4 ஆயிரத்து 160 பேர் கல்லூரிகளை விட்டு வெளியேறவுள்ளனர் என்றும் அவர் கூறினார்.



பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஆசிரியர் வெற்றிடங்களுக்காக 23 ஆயிரத்து 5 பேரை பணியில் இணைக்கும் செயல்திட்டம் தற்போது நடைபெறுகிறது என்றும் கல்வி அமைச்சர் கூறினார். (ஐ)

# அரசியல் கட்சி பிரதிநிதிகளுடன் இந்தியத் தூதுவர் தொடர் சந்திப்பு!



கொழும்பு, ஏப். 26

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா அண்மை நாட்களாக அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகளை தொடர்ச்சியாக சந்தித்து வருகின்றார். இவ்வாறு சந்திக்கும் கட்சிகளின் பிரதிநிதிகள் அனைவரும் எதிர்கட்சிகளை சேர்ந்தவர்களாவர்.

பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ், எதிர்க்கட்சித் தலைவரின் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி திசத் விஜய குணவர்தன ஆகியோரை இந்திய உயர்ஸ்தானிகர் சந்தித்திருந்தார்.

இதேவேளை, அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் ரிஷாத் பதியுதீன் மற்றும் அமீர் அலி ஆகியோரையும் அவர் சந்தித்தார்.

இதேபோன்று சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் லசந்த அழகியவண்ண, துமிந்த திசாநாயக்க,பைசர் முஸ்தபா மற்றும் கலாநிதி சுரேன் ராகவன் ஆகியோரையும் அவர் சந்தித்துள்ளார். (ஐ)

# சிறை குற்றங்களை தடுப்பதற்கு இரகசிய பொலிஸார் நியமனம்!

கொழும்பு, ஏப். 27

சிறைச்சாலைகளில் நடக்கும் சட்டவிரோத நடவடிக்கைகளை கண்காணிக்கவும் முறியடிக்கவும் இரகசிய பொலிஸ் அதிகாரிகளை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

நாடளாவிய ரீதியில் உள்ள 15 சிறைச்சாலைகளில் திட்டமிட்ட குற்றங்களைச் செய்த குற்றாவாளிகள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்களின் செயல்களை இனங்காண 15 விசேட பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் தெரிவித்துள்ளார்.

“கைதிகள் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்தாலும் அவர்கள் அங்கிருந்தவாறே குற்றச்செயல்களை வழிநடத்துகின்றனர். இதைத் தடுக்கவே இரகசிய பொலிஸார்



நியமிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை பாதாள உலகக் கும்பல் மற்றும் குற்றவாளிகளின் தரவுத் தளங்கள் இலங்கை பொலிஸாரிடம் இல்லை எனவும் பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

அதன்படி “2021 ஆம் ஆண்டில், கொழும்பு பதிவு பிரிவை அடிப்படையாகக் கொண்டு குற்றவாளிகளின் தரவுத்தளத்தை நாங்கள் உருவாக்கினோம். தற்சமயம் குற்றவாளிகளின் விரிவான தரவுத் தளத்தை இலங்கை பொலிஸ் திணைக்களம் கொண்டுள்ளது.

2023 ஆம் ஆண்டின் புள்ளி விவரங்களின்படி, நாடளாவிய ரீதியில் 607 பொலிஸ் நிலையங்கள் உள்ளன. எனினும், 62 பொலிஸ் பிரிவுகளில் மாத்திரமே குற்றங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதில் மேல் மாகாணத்தில் 40 பொலிஸ் நிலையங்கள், தென் மாகாணத்தில் 20 பொலிஸ் நிலையங்களிலும் சீதாவாக்க மற்றும் கொஸ்கம பொலிஸ் பிரிவுகள் சப்ரகமுவ மாகாணத்தில் உள்ளன” என்றும் பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார்.

மேற்கூறப்பட்ட 62 பொலிஸ் பகுதிகளிலும் செயற்படும் 20 குற்றக் கும்பல்களை பொலிஸார் அடையாளம் காணப்பட்டு அவைகளுக்கு எதிரான நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார். (ஐ)

### விசேட நடவடிக்கையின் கீழ்

# சிறாரின் நிர்வாண படங்களை பதிவேற்றிய மூன்றுபேர் கைது!

கொழும்பு, ஏப். 27

10 வயதுக்கும் குறைந்த சிறுமிகளின் நிர்வாண படங்களை இணையத்தில் பதிவேற்றிய மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சிறுவர்களின் நிர்வாண மற்றும் ஆபாச ஒளிப்படம் மற்றும் காணொலிகளை சமூக ஊடகங்கள் அல்லது இணையத்தளங்களில் பதிவேற்றுபவர்களை கைது செய்வதற்கான விசேட நடவடிக்கையின் கீழ் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இந்த வருடத்தின் முதல் மூன்று மாதங்களில் சிறார்களுடன் தொடர்புடைய படங்களை வெளியிட்ட 10 சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

இதன்படி, கூகுள் மற்றும் ஏனைய நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கைதான மூவரும் 20 வயதுக்கு குறைந்தவர்கள். இவர்கள் 10 வயதுக்கும் குறைந்த சிறுமிகளின் ஒளிப்படங்கள் மற்றும் காணொலிகளை இணையத்தளங்களில் பதிவேற்றினர் என்றும் அந்த அதிகாரி கூறினார். (ஐ)

# சு. கவிலிருந்து நீக்கப்பட்டவர்களை மீளவும் இணைப்பதற்கு நடவடிக்கை

கொழும்பு, ஏப். 27

பல்வேறு காரணங்களால் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் சிறீ லங்கா சுதந்திர கட்சியில் இருந்து நீக்கப்பட்ட தொகுதி மற்றும் மாவட்ட அமைப்பாளர்களை மீளவும் கட்சியில் இணைத்துக் கொள்வது தொடர்பில் ஆராய குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

சிறீ லங்கா சுதந்திர கட்சியின் அரசியல் குழுக் கூட்டம் ஒன்று அந்தக்கட்சியின் பதில் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா தலைமையில் நேற்று முன்தினம் கூடிய போதே இந்த குழு அமைக்கப்பட்டது.

அமைச்சர் மகிந்த அமரவீர, பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸநாயக்க முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வீரகுமார திஸநாயக்க ஆகியோர் இந்தக் குழுவில் உள்ளனர்.

இந்த குழுவிற்கு சட்ட ஆலோசனைகளை வழங்குவதற்கான பொறுப்பு முன்னாள் அமைச்சர் பைஸர் முஸ்தபாவுக்கு வழங்கப்பட்டுள்ளது. (ஐ)

# அநுரகுமார சுவீடன் பயணம்!

கொழும்பு, ஏப். 27

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க சுவீடனுக்கான பயணமானார்.

சிநேகபூர்வமான சந்திப்புக்களில் பங்கேற்பதற்காக அவர் சுவீடன் சென்றுள்ளார்.

அங்கு அவர் இன்றைய தினம் கூட்டங்கள் சிலவற்றில் பங்கேற்பார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# கஞ்சாவுடன் ஒருவர் கைது

கொழும்பு, ஏப். 26

வெளிநாட்டில் தலைமறைவாக இருந்த போதைப்பொருளை கடத்தும் “ரதுல் குமார” என்பவரின் நெருங்கிய சகாக்களில் ஒருவர் சுமார் 70 இலட்சம் ரூபாய் பெறுமதியான 25 கிலோ கஞ்சாவுடன் களுத்துறை குற்றப் புலனாய்வு பிரிவினரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலைத் தொடர்ந்தே அவர் கைது செய்யப்பட்டார். அப்போது அவரிடம் 2 கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டது.

மேலும் , சந்தேக நபரிடத்தில் மேற்கொண்ட மேலதிக விசாரணையின் போது கடுவலை வெலவிட்ட பகுதியில் உள்ள வீடொன்றில் வைத்திருந்த 23 கிலோ கஞ்சா பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

## ஆஸ்துமா...

எளிமையான - மிகவும் குறைந்த செலவில் அதிக செயல்திறன் கொண்ட மருந்துகளால் கட்டுப்படுத்த முடியும்.

உலகளாவிய ரீதியில் ஒவ்வோர் ஆண்டும் சுமார் 5 இலட்சம் துரதிர்ஷ்டவசமாக ஆஸ்துமாவால் உயிரிழக்கின்றனர் என்றும் சுட்டிக்காட்டினார். (ஐ)

## தந்தை...

இதன்போது, தந்தை செல்வாவின் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து, அவரின் சமாதியில் மலர்கள் தூவப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது. இதைத் தொடர்ந்து நினைவுப் பேருரை ஆற்றப்பட்டது. இதனை, யாழ்ப்பாண பல்கலைக்கழக பேராசிரியர் கே. ரி. கணேசலிங்கம் "இலங்கை தமிழ் தேசிய இனத்தின் விடுதலைக்கான வாய்ப்புக்களும் சவால்களும்" என்ற தலைப்பில் ஆற்றினார்.

இதேபோன்று, நேற்று மாலை தெல்லிப் பழை சேமக்காலையிலும் அஞ்சலி நிகழ்வு நடைபெற்றது.

இதேபோன்று, மட்டக்களப்பு, வவுனியா மாவட்டங்களிலும் தந்தை செல்வாவுக்கு நினைவஞ்சலி செலுத்தப்பட்டது.

## வடகிழக்கில்...

அதிகரித்த வெப்பநிலை இந்த மாதத்தின் இறுதி நாட்களிலும் (நாளை முதல்) அடுத்த மாதத்தின் ஆரம்ப நாட்களிலும் குறிப்பாக மே 12ஆம் திகதி வரை தற்போது உள்ளதை விட உயர்வாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வெப்ப அலை சுட்டெண்ணின் ஆபத்தான வகைப்பாட்டுக்குள் நாம் இருப்பதற்கான வாய்ப்புகள் அதிகமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எதிர்வரும் 30ஆம் திகதிக்கு பின்னர் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் பகல் பொழுதின் அதி கூடிய வெப்பநிலை 40 பாகை செல்சியஸுக்கு மேலாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தக் காலத்தில் உணரக்கூடிய வெப்பநிலையின் அளவு உண்மையான வெப்பநிலையை விடவும் உயர்வாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை இந்துக்களின் பஞ்சாங்கம் காண்டாவனம் அல்லது அக்கினி நாள்/ அக்கினி நட்சத்திரம் என்பது எதிர்வரும் மே 04ஆம் திகதி சனிக் கிழமை முதல் மே 28ஆம் திகதி செவ் வாய்க் கிழமை வரை நிலவும் என குறிப் பிடுகின்றது (காண்டாவனம்/அக்கினி நாள்/அக்கினி நட்சத்திரம் என்பது பரணி நட்சத்திரத்தின் 3ஆம், 4ஆம் பாதங்களையும் (கால் எனவும் குறிப்பிடுவர்) கார்த்திகை நட்சத்திரத்தின் அனைத்து பாதங்களையும், ரோகிணி நட்சத்திரத்தின் முதலாம் பாதத்தையும் சூரியன் கடக்கும் நாட்களே ஆகும்).

கடந்த சில நாட்களாக இரவு பொழுது வளிமண்டல சார் ஈரப்பதனின் அளவு உயர்வாக உள்ளது. இது எதிர்வரும் நாட்களில் மேலும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் எமது உடல் அசௌகரியமான நிலைமையை உணரும் வாய்ப்பு உண்டு.

தற்போது வடக்கு, கிழக்கு மாகாணங்களின் ஆவியாக்க அளவு உயர்வாக உள்ளது. இது மேலும் அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது. எனவே எமது நீர்ப் பயன்பாட்டை வினைத்திறனாக மேற்கொள்வது சிறந்தது.

இன்று முதல் 30ஆம் திகதி வரை வடக்கு மாகாணத்தின் சில இடங்களில் பிற்பகலுக்கு பின்னர் மிதமான மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது. எனினும், இந்த மழை அதிகரித்த வெப்பமான வானிலையை தணிக்க போதுமானதல்ல.

எனவே, இக்காலப்பகுதியில் பாடசாலைகளில் மாணவர்களின் உடற் பயிற்சி மற்றும் விளையாட்டு செயல்பாடுகளை தவிர்ப்பதுடன், நோயாளர்கள், வயதானவர்கள், விசேட தேவையுடையவர்கள் பகல் பொழுது பிரயாணங்களை தவிர்ப்பது சிறந்தது. (ஐ)

# புலிகளை தமிழர்கள் நினைவுகூருவதுபோல சஹ்ரானை முஸ்லிம் அஞ்சலிப்பதில்லையாம்

## பாராளுமன்றில் சொன்னார் ஹக்கீம்



கொழும்பு, ஏப். 27

ஜே. வி. பியினரை சிங்களவர்களும் புலிகளை தமிழர்களும் நினைவுகூருகிறார்கள். ஆனால், சஹ்ரான் குழுவினரை முஸ்லிம்கள் நினைவுகூருவதில்லை. அவர்களை முஸ்லிம்கள் ஏற்கவில்லை என்று சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் வலியுறுத்தினார்.

தேசிய பாதுகாப்பு மற்றும் புலனாய்வு தகவல்கள் தொடர்பில் செயல்பட அனைத்து கட்சிகளையும் உள்ளடக்கிய பாராளுமன்ற மேற்பார்வை குழு அமைக்கப்பட வேண்டும் என்றும் ஹக்கீம் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான சபை ஒத்திவைப்புவேளை மூன்றாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்கள் விவாதத்தில் பல்வேறு கருத்துக்களை வெளியிட்டுள்ளனர். ஒருவருக்கொருவர் குற்றஞ்சாட்டிக் கொண்டிருக்கிறோம்.

ஆனால், இதனடிப்படை என்ன என்பதை தெரியாமல் இருக்கிறோம். தாக்குதல் தொடர்பில் பலருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்திருப்பதாகவும் விசாரணைகள் பெரும்பாலும் முடிவடைந்திருப்பதாகவும் சட்டம் ஒழுங்கு அமைச்சர் தெரிவித்தார். விசாரணைகளில் பல புதிய விடயங்கள் வெளிப்பட்டுள்ளன. அதனால் மேலும் விசாரணைகள் இடம்பெறும்போது இன்னும் பல புதிய விடயங்கள் வெளிவரும்.

அத்துடன் புலனாய்வுத் துறையுடன் இணைந்து செயல்படும் டிப்போலி குழு தொடர்பாகவும் இந்த சபையில் பேசப்பட்டது. டிப்போலி குழுவின் செயல்பாடு அனைவருக்கும் தெரியும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் இந்த டிப்போலி குழு தொடர்பாக கேட்டிருக்கிறார். டிப்போலி குழு தொடர்பில் அவருக்குத் தெரியாமல் இல்லை. ஏனெனில் அவரின் அரசாங்கத்தில் நாங்கள் இருந்திருக்கிறோம்.

மேலும் ஈரான் ஜனாதிபதியின் வருகையின் போது நாட்டில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது. யாரும் ஊடுருவ முடியாதவாறு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. அவர் பாதுகாப்பாக திரும்பிச்செல்லும் வரை சிறப்பான பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறானவர்கள் வரும் போது நாட்டின் பாதுகாப்பு உறுதியானதாக இருக்க வேண்டும். 2019 இல் ஏப்ரல் மாதத்தில் ஈஸ்டர் தாக்குதல் இடம்பெறுவதற்கு முன்னர் அது தொடர்பில் புலனாய்வுத் தகவல் கிடைக்கப்பெற்றிருந்தது. அப்படியானால் ஏற்பட்ட தவறு என்ன?

உயிர்த்த ஞாயிறு தாக்குதலை முஸ்லிம் மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. ஒரு காலத்தில் ஜே. வி. பியினர் பயங்கரவாத அமைப்பாகச் செயல்பட்டது. இதன் போது கொல்லப்பட்டவர்களை அந்தக் கட்சியினர் இப்போதும் நினைவுகூருகின்றனர். அத்துடன், உயிரிழந்த விடுதலைப் புலிகளை மாவீரர்களாக தமிழர்கள் நினைவு கூருகின்றனர். ஆனால், முஸ்லிம் சமூகம் சஹ்ரானையும் அவரின் சகாக்களையும் நினைவு கூருவதில்லை. அவர்களை முஸ்லிம்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. இதன்படி அந்தத் தாக்குதலை சில குழுவே நடத்தியுள்ளது என்பதே உண்மையாகின்றது- என்றார். (எ)

## சஜித்...

ஈஸ்டர் தாக்குதல்கள் தொடர்பில் பாராளுமன்றத்தில் பல விவாதங்கள் இடம்பெற்றுள்ளன. இதற்காக மாத்திரம் 150 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் பேராயரும், கத்தோலிக்க சபையும் மக்கள் மத்தியில் மாறுபட்ட நிலைப்பாட்டை தோற்றுவிக்க முயற்சிக்கிறது. கத்தோலிக்கர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்காக அவர்கள் குரல் கொடுக்கிறார்கள் என்பதை ஏற்றுக்கொள்கிறேன்.

இருப்பினும், இந்தத் தாக்குதல் நாட்டில் நடைபெற்ற முதலாவது தாக்குதல் அல்ல. தலதா மாளிகை, சிறீ மகா விகாரை, காத்தான்குடி பள்ளி வாசல் தாக்குதல் என மதத் தலங்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

தலதா மாளிகை தாக்குதல், அரந்தலாவ பிக்குகள் படுகொலை சம்பவங்களை சிங்கள - பௌத்தர்கள் இழுத்துக் கொண்டு செல்லவில்லை. உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்தாரிகளையும், தாக்குதலை தடுக்கத் தவறியவர்களையும் கத்தோலிக்க சபை குற்றஞ்சாட்டுவதில்லை. முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை மாத்திரமே விமர்சிக்கிறார்கள். குற்றஞ்சாட்டுகிறார்கள்.

கத்தோலிக்க மக்களுக்கு இந்த நாட்டிலுள்ள கௌரவத்தை இல்லாதொழிக்க வேண்டாம் என பேராயரிடமும், கத்தோலிக்க சபையிடமும் கைகூப்பி வேண்டிக் கொள்கிறேன்.

சஜித்துக்கும் அநுரவுக்கும் வாக்களிக்குமாறு பேராயர் குறிப்பிடுகிறார். தேர்தலில் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்று இவரால் எவ்வாறு குறிப்பிட முடியும்

மக்கள் விடுதலை முன்னணிக்கு வாக்களிக்குமாறு பேராயர் குறிப்பிடுகிறார். ஆனால், குண்டுத் தாக்குதல்தாரிகளின் தந்தை மக்கள் விடுதலை முன்னணியின் தேசிய பட்டியல் உறுப்பினர். இந்த கட்சிக்கு வாக்களிக்குமாறு குறிப்பிடும் அளவுக்கு பேராயர் ஏன் தள்ளப்பட்டுள்ளார் என்பதை அறிய வில்லை. ஆகவே, இவரின் கருத்துகள் துரதிர்ஷ்டவசமானது.

தலதா மாளிகைக்கு தாக்குதல் நடத்தப்பட்டது. ஆனால், நாங்கள் ஒருபோதும் சிங்களவர்களுக்கு மாத்திரம் வாக்களிக்குமாறு குறிப்பிடவில்லை. ஆகவே, உயிர்த்த ஞாயிறு தின குண்டுத் தாக்குதல்களை அரசியலுக்காக பயன்படுத்துவதை தவிர்த்து கொள்ள வேண்டும் - என்றார். (எ)

## முறிகண்டி...

நடந்த விபத்தில் காயமடைந்தவர்கள் கிளிநொச்சி பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் நோக்கி வந்த பாரவூர்தியும் முறிகண்டியிலுள்ள இராணுவ முகாமுக்கு சென்ற இராணுவ கெப் ரக வாகனமும் மோதியே இந்த விபத்து இடம்பெற்றது. இதில் 39 வயதான படைச் சிப்பாய் உயிரிழந்தார். 9 படையினர் காயமடைந்தனர்.

விபத்து தொடர்பில் மாங்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## ஓ.எல்...

முடிவை எதிர்பார்த்து காத்திருக்கின்றனர். க. பொ. த. உயர்தரத்துக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்ட நிலையில் அந்த மாணவர்கள் இதன் மூலம் பெரும் அசௌரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதற்கு பதிலளித்த அமைச்சர், வழமையாக உள்ளதை விட இம்முறை சாதாரண தர பரீட்சை விடைத்தாள் மீள்பரிசீலனைக்காக இரண்டு மடங்கு விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன. இது தொடர்பான நடவடிக்கைகள் நிறைவு பெறும் நிலையில் உள்ளது. அடுத்த மாத முற்பகுதியில் அதனை வெளியிட முடியும்.

மே இரண்டாவது வாரத்தில் சாதாரண தரப் பரீட்சை ஆரம்பமாகவுள்ளது. இதற்கு முன்னதாக மீள்பரிசீலனை பெறுபேறுகள் வெளியிடப்படும் என்று பரீட்சைகள் ஆணையாளர் எனக்கு அறிவித்துள்ளார் - என்றும் கூறினார். (ஐ)

## தேரருக்கு பிணை

கொழும்பு, ஏப். 27

நீதிமன்ற உத்தரவை மீறி அரச அதிகாரிகளின் பணிகளுக்கு இடையூறு விளைவித்த குற்றத்துக்காக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த உலப்பனே சுமங்கல தேரர் உட்பட 5 சந்தேகநபர்களை பிணையில் விடுவிக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதன்படி, சுமங்கல தேரர் உள்ளிட்ட 4 சந்தேகநபர்கள் தலா 2 இலட்சம் ரூபாய் பிணையிலும் மற்றுமொரு சந்தேகநபரை ஒரு இலட்சம் ரூபாய் பிணையிலும் விடுவிக்க உத்தரவிடப்பட்டது.

மேலும் சுமங்கல தேரருக்கு வெளிநாட்டு பயணத்தடையும் விதிக்கப்பட்டது. (எ)

## அமைச்சரவை...

தற்போதைய கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவிடம் வழங்கவும் கல்வி அமைச்சராக தம்மிக பெரேராவை நியமிக்கவும் நடவடிக்கை எடுக்கப் படுகிறது என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (ஐ)

## மட்டு...

யோசப் பொன்னையா மட்டக் களப்பை சேர்ந்தவராவார். மட்டக்களப்பை பிரதிநிதித்துவப்படுத்திய அந்த மாவட்டத்தை சேர்ந்த முதல் ஆயராவார்.

1980ஆம் ஆண்டு அருட் தந்தையாக பணியை ஆரம்பித்த ஆயர் யோசப் பொன்னையா, வாகரை, வீச்சுக்கல் முனை, ஆயித்தியமலை ஆகிய இடங்களில் அருட்பணியாற்றினார்.

பின்னர், மட்டக்களப்பு புனித வளனார் சிறிய குருமடத்தில் பணிப்பாளராக (1993-96) பணியாற்றிய பின்னர் அம்பிட்டி தேசிய குருமடத்தில் (1996-2001) பேராசிரியராக நியமிக்கப்பட்டார்.

2001-06 காலப்பகுதியில் தாண்டவன்வெளி பங்கு தந்தையாக பணியாற்றிய பின்னர் 2006 இல் திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் பதில் பொறுப்பாளராகப் பதவியேற்றார். கிழக்கு பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகவும் பணியாற்றினார்.

2008 பெப்ரவரியில் திருகோணமலை - மட்டக்களப்பு மறை மாவட்டத்தின் துணை ஆயராக நியமிக்கப்பட்டு, 2008 மே மாதத்தில் அதன் ஆயராகப் பதவியேற்றார்.

2012 ஜூலையில் மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் முதலாவது ஆயராகத் திருநிலைப்படுத்தப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# இலங்கை விவசாயத் துறைக்கு அமெரிக்கா பல்வேறு உதவிகள்

கொழும்பு, ஏப். 27

**இலங்கை விவசாயத் துறைக்கு பல்வேறு உதவிகளை வழங்க முன்வந்துள்ள அமெரிக்கா அது தொடர்பிலான உயர் மட்ட சந்திப்புகளை ஆரம்பித்துள்ளது.**

இலங்கையின் விவசாயத் துறைக்கு அமெரிக்க விவசாயத் திணைக்களம் வழங்கும் உதவிகள் குறித்து கலந்துரையாடுவதற்காக, அமெரிக்க விவசாயத் திணைக்களத்தின் வர்த்தக மற்றும் வெளிநாட்டு விவசாய விவகாரங்களுக்கான துணைச் செயலாளரான அலெக்சிஸ் டெய்லர், அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் ஆகியோர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஏனைய சிரேஷ்ட அரசாங்க அதிகாரிகளை நேற்று வெள்ளிக்கிழமை கொழும்பில் சந்தித்தனர்.

அதிகரித்த உணவுப் பாதுகாப்பை ஊக்குவித்தல் மற்றும் கால நிலையுடன் தொடர்புடைய சவால்களுக்கு எதிரான மீண்டெழும் தன்மையினை அதிகரித்தல் ஆகிய வற்றை மேற்கொண்டு இலங்கையின் விவசாய அபிவிருத்தி மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு உதவி செய்வதில் அமெரிக்க மக்கள் வெளிப்படுத்திக் கொண்டிருக்கும் தொடர்ச்சியான உறுதிப்பாட்டினை துணைச் செயலாளர் டெய்லரின் வருகை அடிக்கோடிட்டுக் காட்டியது.

சுற்றுச்சூழலுக்கு உகந்த நடைமுறைகள் மற்றும் மேம்படுத்தப்பட்ட சந்தை இணைப்புக்கள் ஊடாக உணவுப் பாதுகாப்பு மற்றும் காலநிலையுடன் தொடர்புடைய சவால்களுக்கு எதிரான மீண்டெழும் தன்மையினை மேம்படுத்துதல் ஆகியவிடயங்களில் கவனம் செலுத்தும் 2024 Food for Progress எனும் முன்முயற்சியில் ஒரு முன்னுரிமை நாடாக இலங்கை வகிக்கும் முக்கிய பங்கினை இந்தக் கலந்துரையாடல்கள் உறுதிப்படுத்தின.

இலங்கையில் 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாற்பண்ணையாளர்களுக்கு அவர்களது பாலுற்பத்தியை மேம்படுத்துவதற்கு உதவிசெய்த 27. 5 மில்லியன் டொலர் பெறுமதியுடைய Market-Oriented Dairy எனும் செயல் திட்டம் தொடர்பில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டது.

தேவையற்ற எரிசக்தி நுகர்வினைக் குறைக்கும் விதத்திலான கால்நடை வளர்ப்பு மற்றும் தீவன நுகர்வு உத்திகள் தொடர்பில் விரிவான பயிற்சியை வழங்குவதன் மூலம் பாற்பண்ணையாளர்கள் காலநிலை மாற்றங்களுக்கு இசைவாக்கமடைவதை மேம்படுத்துவது இந்த செயல்திட்டத்தின் இலக்காகும்.

இலங்கையின் தேசிய பாடசாலை உணவு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ள சுமார் 2 இலட்சம் மாணவர்களுக்கு உணவு வழங்குவது இச்செயல் திட்டத்தின் தற்போதைய இலக்காகும். - என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# தலைவரானார் சன்ன ஜயசுமண



கொழும்பு, ஏப். 27

பாராளுமன்றத்தில் புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட இலங்கை மருத்துவ பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியத் தலைவராக பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சன்ன ஜயசுமண தெரிவு செய்யப்பட்டார்.

இந்த ஒன்றியத்துக்கான செயற்குழு உறுப்பினர்களை நியமிக்கும் முதலாவது கூட்டம் 25 ஆம் திகதி பாராளுமன்றத்தில் இடம்பெற்ற போதே சன்ன ஜயசுமண தெரிவு செய்யப்பட்டார்.

குறித்த ஒன்றியத்தின் போஷகர்களாக ராஜித சேனாரத்ன மற்றும் சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண ஆகியோர் தெரிவு செய்யப்பட்டதுடன், இணை உப தலைவர்களாக சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே மற்றும் காவிந்த ஜயவர்தன ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

மேலும், ஒன்றியத்தின் இணை அமைப்பாளர்களாக திலக் ராஜபக்ஷ உபுல் கலப்பதி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (எ)

# வலுசக்தியை ஒழுங்குபடுத்த இலங்கையில் புதிய நிறுவனம்

கொழும்பு, ஏப். 27

வலுசக்தித் துறையை ஒழுங்குமுறைப்படுத்த இலங்கை புதிய நிறுவனம் ஒன்றை ஸ்தாபிக்கும் முயற்சியில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

பெற்றோல், டீசல், விமானங்களுக்கான எரிபொருள், திரவப் பெற்றோலிய வாயு மற்றும் உராய்வு எண்ணெய் உள்ளிட்ட பெற்றோலியப் பொருட்கள் உற்பத்தி நிறுவனம், சுத்திகரித்தல், விநியோகித்தல் மற்றும் சந்தைப்படுத்தல் போன்றன தற்போது காணப்படுகின்ற சட்டங்களுக்கமைய மேற்கொள்ளப்பட்டாலும், இத்துறையில் விரிவான ஒழுங்குமுறைப்படுத்தல் பொறிமுறையொன்று இல்லை.

தனியார் நிறுவனங்கள் பல பெற்றோலிய உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் விநியோக நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற நிறுவனங்கள் பலவும் தொடர்புபடுவதால், இத் துறையில் ஏற்படுகின்ற சவால்களுக்கு தீர்வு காணல், உற்பத்திகளின் தரங்களை அதிகரித்தல் மற்றும் வாடிக்கையாளர்கள், முதலீட்டாளர்கள் மற்றும் ஏனைய தரப்பினர்களின் தேவைகளைப் பாதுகாப்பதற்காக சுயாதீன, ஆற்றல்மிக்க, பயனுள்ள மற்றும் வினைத்திறனான ஒழுங்குமுறைப்படுத்தல் பொறிமுறைக்கான தேவை கண்டறியப்பட்டுள்ளது.

இது தொடர்பான விடயங்களை ஆராய்ந்து விதந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்கும், சட்டங்களைத் தயாரிப்பதற்கும் வலுசக்தி, மின்சக்தி அமைச்சின் செயலாளரின் தலைமையிலான குழு ஒன்றை நியமிப்பதற்காக வலுசக்தி, மின்சக்தி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (எ)

# லிதுவேனியாவிலிருந்து இருவர் நாடு திரும்பினர்

கொழும்பு, ஏப். 27

லிதுவேனியாவில் கனரக வாகனச் சாரதிகள் வேலைக்காகச் சென்ற 106 இலங்கையர்களில் இரண்டு இலங்கையர்கள் நேற்று வெள்ளிக்கிழமை காலை கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

106 இலங்கையர்கள் கொழும்பிலுள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் ஒன்றில் 12 இலட்சம் ரூபாயைச் செலுத்தி லிதுவேனியாவுக்கு வேலைக்குச் சென்றனர் .

இவர்கள் அந்த நாட்டுக்குச் சென்ற பிறகு இருவருக்கு மட்டும் கனரக வாகனச் சாரதிகள் வேலை வழங்கப்பட்டதாகவும் , மற்றையவர்கள் பன்றிக் கூடுகளில் வேலைக்கு அனுப்பப்பட்டதாகவும் நாடு திரும்பிய இலங்கையர் ஒருவர் தெரிவித்தார் .

அத்துடன் இலங்கையிலிருந்து சென்ற அனைவரும் கனரக வாகனங்களைச் செலுத்துவதற்கு தகுதியானவர்கள் என்பதுடன் பன்றி வளர்ப்பு வேலை அவர்களுக்குக் கடினமானதாக இருந்ததாக அவர் தெரிவித்தார்.

இரண்டு ஆண்டுகளாக அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த குடியிருப்பு வீசாக்களை லிதுவேனியா அரசாங்கம் இரத்துச் செய்ததுடன் ஒரு நாளைக்கு 10 யூரோக்கள் செலவழித்து தங்குமிடத்தை ஏற்பாடு செய்தனர் .

இது தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் அமைப்பின் தலைவருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து இவர்கள் இருவர் மாத்திரம் நேற்று இலங்கைக்கு அழைத்து வரப்பட்டனர். (எ)

# போலி ஆவணங்களை தயாரித்து மோசடியில் ஈடுபட்ட இருவர் கைது

கொழும்பு, ஏப். 27

போலி ஆவணங்கள் மற்றும் உத்தியோகபூர்வ முத்திரையை போலியான முறையில் பயன்படுத்தி இளைஞர்கள் குழுவொன்றை ருமேனியாவுக்கு வேலைக்கு அனுப்பு முயன்ற நபரை கைது செய்து மேலதிக விசாரணைகளுக்காக குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்க வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் விமான நிலையப் பிரிவு அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

கிளிநொச்சி பிரதேசத்திலுள்ள வேலைவாய்ப்பு நிறுவனம் ஊடாக ருமேனியாவுக்கு வேலைக்குச் செல்வதற்காக வந்த ஐந்து இளைஞர்களின் ஆவணங்களைச் சரிபார்த்த அதிகாரிகளுக்கு அவை தொடர்பில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

பின்னர், பணியகத்தின் கட்டுநாயக்கா விமான நிலையப் பிரிவு அதிகாரிகள், அவர்களுடன் வந்த முகவர் நிறுவனத்தின் பிரதிநிதியை தடுத்து நிறுத்தி விசாரணை நடத்தினர்.

இதன்போது, குறித்த வேலைவாய்ப்பு நிறுவனம் சட்டவிரோதமான நிறுவனம் என்பது தெரியவந்தது.

எனவே, வெளிநாடு செல்ல வந்த இளைஞரின் பணியகப் பதிவு உள்ளிட்ட ஆவணங்களை அதிகாரிகள் தீவிரமாக ஆராய்ந்த போது, பணியகத்தின் பாதுகாப்பு முத்திரைகள், உத்தியோகபூர்வ முத்திரைகள் போலியான முறையில் பயன்படுத்தப்பட்டுள்ளது தெரியவந்தது.

அதிகாரிகளிடம் வழங்கப்பட்ட ருமேனியா வீசாக்கள் போலி வீசாக்கள் என்பதும் தெரியவந்தது.

இதன்படி, கைது செய்யப்பட்ட சந்தேகநபர் மேலதிக விசாரணைகளுக்காக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டதுடன், அவருக்கு உதவிய மற்றுமொரு நபரும் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார். (எ)

# சிறுமிகள் துஷ்பிரயோகம் குடும்பஸ்தர் கைதானார்!

வெல்லவாய, ஏப். 27

மகளையும் மகளின் தோழியையும் பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாகக் கூறப்படும் தந்தையொருவர் வெல்லவாய பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

12 மற்றும் 11 வயதுடைய இரண்டு சிறுமிகளே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர்.

பிரதேசவாசிகளால் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபர் வெல்லவாய நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்ட நிலையில் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# அரசாங்கம் இலவசமாக வழங்கிய அரிசி தொடர்பில் முறைப்பாடு

கொழும்பு, ஏப். 27

அரசாங்கத்தால் இலவசமாக வழங்கப்பட்ட அரிசியை பெற்றுக் கொண்ட நபர் ஒருவர் ஹாலி - எல சுகாதார மருத்துவ அதிகாரி காரியாலயத்துக்குச் சென்று, வழங்கப்பட்ட அரிசி தொடர்பில் முறைப்பாடு செய்துள்ளார்.

ஹாலி - எல பிரதேசத்தை சேர்ந்த இவர் அரசாங்கத்தால் தமக்கு இலவசமாக வழங்கப்பட்ட அரிசி பாவனைக்குத் உகந்ததல்ல எனக்கூறி, அவருக்கு கிடைத்த அரிசியில் ஒரு பகுதியைச் சுகாதார மருத்துவ அதிகாரி காரியாலயத்துக்கு எடுத்துச் சென்று இவ்வாறு முறைப்பாடு செய்துள்ளார். (எ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 27.04.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.



# “அதிரடி தான் எங்கள் வழி”

## எஸ். ஆர். எச். தலைவர் உறுதி

ஹைதராபாத், ஏப். 27

இலக்கைத் துரத்தும்போது அதிக விக்கெட்டுகளை மடமடவென்று இழந்தோம். இந்தத் தோல்வி குறித்து அதிகம் யோசிக்க விரும்பவில்லை என்று சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணித் தலைவர் பாட் கம்மின்ஸ் கூறினார்.

நாங்கள் இப்படி துடுப்பாட்டம் செய்வதுதான் எங்களுக்குப் பொருத்தமாக உள்ளது. ஒவ்வொரு போட்டியிலும் இது பொருந்தாது. ஆனால் இதுதான் எங்கள் வழி, அதிரடி தான் எங்கள் முறை.

இலக்கைத் துரத்தும்போது மட்டுமல்ல, இலக்கை நிர்ணயிப்பதிலும் எங்களது அதிரடி அணுகுமுறையில் எந்தவொரு மாற்றமும் செய்யப்போவதில்லை. ஒவ்வொரு போட்டியிலும் வெல்ல முடியாது. அதற்காக அணுகுமுறையை மாற்றுவதாக இல்லை. - என்றார். (எ)

## ஐ. பி. எல். இம்பக்ட் வீரர் விதியால் சகலதுறை வீரர்களுக்கு ஆபத்து

டில்லி, ஏப். 27

இம்பக்ட் வீரர் விதியால் சகலதுறை வீரர்களின் நிலைமை ஆபத்தில் இருப்பதாக உணர்கிறேன் என டில்லி அணியின் சகலதுறை வீரர் அக்சர் படேல் தெரிவித்தார்.

ஒவ்வொரு அணியும் துடுப்பாட்ட வீரர் அல்லது பந்து வீச்சாளரை இம்பாக்ட் வீரராகக் களமிறக்கி விளையாட விரும்புகின்றன. இதனால் சகலதுறை வீரர்கள் பயன்படுத்தப்படுவதில்லை.

துடுப்பாட்டம் அல்லது பந்து வீச்சு தேர்வை பொறுத்து இம்பாக்ட் வீரரை ஒவ்வொரு அணியும் 6 துடுப்பாட்ட வீரர்கள் அல்லது பந்து வீச்சாளர்கள் தங்களிடம் இருப்பதாக கருதி களமிறங்குகிறார்கள். இது சிலநேரங்களில் குழப்பத்தை ஏற்படுத்துகிறது.

குஜராத் அணிக்கு எதிரான ஆட்டத்தில் துடுப்பாட்டத்தில் நான் 3 ஆவது வீரராக களமிறங்குவேன் என்பது முன்பே எனக்குத் தெரியாது. எதிரணியினர் 3 சுழற்பந்து வீச்சாளர்களைக் கொண்டு விளையாடுவதால் என்னைக் களமிறங்க கூறினார்கள். முதலில் ரிஷப் பண்ட்டிடம் கேட்கப்பட்டது.

பின்னர் விவாதித்து நான் களமிறங்குவதாகக் கூறினேன். அப்போது கூட ரிஷப் பண்ட் களமிறங்க விரும்பினார். ஆனால், அவர்கள் சுழற்பந்து வீச்சாளர்களைப் பிற்பகுதியில் பயன்படுத்துவார்கள் எனக் கூறினேன். மேலும் 4 ஆவது வீரராக நீங்கள் களமிறங்கினால் நடு ஓவர்களை திறம்பட சமாளிக்க முடியும் எனவும் ரிஷப் பண்ட்டிடம் கூறினேன்.

பந்து வீச்சைப் பொறுத்தவரையில் நான் எதையும் புதிதாக செய்யவில்லை. வேகத்தில் சில மாறுபாடுகளை சேர்த்துள்ளேன். இதற்கு முன்னர் வேகம் குறைந்த பந்துகளை வீசுவதில் எனக்கு நம்பிக்கை இருந்தது இல்லை. ஆனால் தற்போது அதில் நம்பிக்கை கிடைத்துள்ளது.

பந்து வீச்சில் மேற்கொள்ளும் வேக மாறுபாடுகள் இப்போது ஒரு பெரிய வித்தியாசத்தை ஏற்படுத்தகின்றன- என்றார்.

ஒவ்வொரு அணியும் ஆட்டத்துக்கு முன்னதாக வழக்கமாகக் கொடுக்கப்படும் 11 வீரர்களின் பெயர்களோடு 4 மாற்று வீரர்களின் பெயர்களையும் அளிக்க வேண்டும். அந்த 4 வீரர்களில் ஒருவரை ஆட்டத்தின் நடுவில் இம்பாக்ட் வீரர் விதியின் கீழ் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இந்த விதியை மும்பை இந்தியன்ஸ் அணியின் நட்சத்திர வீரர் ரோஹித் சர்மா, ஆர். சி. பி. வேகப்பந்து வீச்சாளர் முகமது சிராஜ் உள்ளிட்டோர் விமர்சித்திருந்தனர். இந்த வரிசையில் தற்போது அக்சர் படேலும் இணைந்துள்ளார். (எ)

# சொதப்பியது சன்ரைசர்ஸ் ஆர். சி. பி. அசத்தல் வெற்றி

ஹைதராபாத், ஏப். 27

எஸ். ஆர். எச். அணியின் துடுப்பாட்ட வீரர்களுக்கு அதிர்ச்சி கொடுத்து, தொடர் தோல்விகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து ஆர். சி. பி. அபார வெற்றி பெற்றது.

நடப்பு ஐ. பி. எல். தொடரின் 41 ஆவது லீக் போட்டியில் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் மற்றும் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு அணிகள் மோதின. இந்தப் போட்டியில் 35 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ஆர். சி. பி அணி வெற்றி பெற்றது.

ஹைதராபாத் நகரிலுள்ள ராஜீவ் காந்தி சர்வதேச மைதானத்தில் இந்தப் போட்டி நடைபெற்றது. இதில் நாணயச்சுழற்சியில் வென்ற றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு அணி முதலில் துடுப்பாட்டத்தை தெரிவு செய்தது. அந்த அணி 20 ஓவர்களில் 7 விக்கெட்கள் இழப்புக்கு 206 ஓட்டங்கள் எடுத்தது. அந்த அணி சார்பில் அதிகப்படியாக விராட் கோலி 51, ரஜத் பட்டிதார் 50, கேமரூன் கிரீன் 37 ஓட்டங்கள் எடுத்தனர்.

207 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணி விரட்டியது. அந்த அணிக்காக அபிஷேக் சர்மா மற்றும் ட்ராவிஸ் ஹெட் இணைந்து இன்னிங்ஸை ஆரம்பித்தனர். முதல் ஓவரில் ஹெட்டை ஓட்டத்தில் வெளியேற்றினார் வில் ஜேக்ஸ். அடுத்து 13 பந்துகளில் 31 ஓட்டங்கள் எடுத்து அபிஷேக் சர்மா ஆட்டமிழந்தார்.

மார்க்ரம் மற்றும் கிளாசனை ஒரே ஓவரில் வீழ்த்தினார் ஸ்வப்னில் சிங். தொடர்ந்து நிதிஷ் ரெட்டி, அப்துல் சமாத் ஆகியோரும் விக்கெட்டை பறிகொடுத்தனர். 10 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்கள் இழப்புக்கு 89 ஓட்டங்கள் எடுத்திருந்தது சன்ரைசர்ஸ்.

எஸ். ஆர். எச். அணித் தலைவர் கம்மின்ஸ் 15



பந்துகளில் 31 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். புவனேஷ்வர் குமார் 13 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். 20 ஓவர்களில் 8 விக்கெட்கள் இழப்புக்கு 171 ஓட்டங்கள் எடுத்தது சன்ரைசர்ஸ்.

இதன் மூலம் ஆர். சி. பி. அணி 35 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. அந்த அணி இதற்கு முன்பாக தொடர்ந்து 6 போட்டிகளில் தோல்வியைத் தழுவியிருந்தது. ஆர். சி. பி. அணி பந்து வீச்சாளர்கள் ஸ்வப்னில் சிங், கரண் சர்மா, கிரீன் ஆகியோர் தலா 2 விக்கெட்கள் வீழ்த்தினர்.

இதுவரை நடைபெற்ற போட்டிகளில் ஆர். சி. பி. அணி சந்தித்த தோல்விகளுக்கு பந்து வீச்சாளர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டு வந்தது. இந்நிலையில் எஸ். ஆர். எச். அணிக்கு எதிரான போட்டியில் ஆர். சி. பி. அணியின் பந்துவீச்சாளர்கள் ஆதிக்கம் செலுத்தியது அந்த அணியின் இரசிகர்களை உற்சாகப்படுத்தியுள்ளது. (எ)

# “பரிசளிப்பில் பேசுவதை நான் மறந்துவிட்டேன்”

ஹைதராபாத், ஏப். 27

அணி வீரர்களிடம் நம்பிக்கையை வரவழைக்க வேண்டுமெனில் அதற்கு வெற்றிதான் ஒரே வழி.- இவ்வாறு றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு அணியின் தலைவர் ஃபாப் டூப்ளசிஸ் தெரிவித்தார்.


இதேவேளை, பரிசளிப்பு நிகழ்வில் எவ்வாறு பேசுவது என்பதை மறந்துவிட்டேன் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஆர். சி. பி. அணி ஒருவழியாக வெற்றியை நீண்ட இடைவெளிக்குப் பிறகு ருசித்துள்ளது. அதுவும் ஒரு மாதத்துக்குப் பிறகு 2 ஆவது வெற்றியை ஈட்டியுள்ளது.

வெற்றிக்குப் பின்னர் ஆர். சி. பி. அணித் தலைவர் டூப்ளசிஸ் கூறுகையில், தோற்றுத் தோற்று பரிசளிப்பு நிகழ்ச்சியில் வெற்றிக்குப் பிறகு எப்படிப் பேசுவது என்பதையே மறந்து விட்டேன்.

ஒவ்வொரு போட்டியின் முடிவிலும் ஏதோ பேசிவிட்டு சென்று விடுவேன். முந்தைய சன்ரைசர்ஸ் போட்டியிலும் 260 வரை வந்தோம், கொல்கத்தாவிடம் ஒரு ஓட்டம் வித்தியாசத்தில் தோற்றோம். நெருக்கமாக வருகிறோம். ஆனால் வெல்ல முடியவில்லை. அணி வீரர்களிடத்தில் நம்பிக்கையை வரவழைக்க வேண்டுமெனில் அதற்கு வெற்றிதான் ஒரே வழி.

தோல்விகளை அடைந்து கொண்டே போலியாக நம்பிக்கை ஊட்டிக் கொண்டிருக்க முடியாது. தோல்வி நம் மனநிலையைப் பாதிக்கும். இதுவரை 50 வீதம், 60 வீதம் ஆற்றலுடன் தான் ஆடினோம். இது நம்பிக்கை அளிக்க போதுமானதல்ல. ரஜத் படிதார் அடுத்தடுத்து அரைச்சதம் அடித்தது அவருக்கு நல்ல நிறைவையளித்திருக்கும். - என்றார். (எ)






# ஓர் ஓட்டம்கூட கொடுக்காமல் 7 விக்கெட்கள் வீழ்த்தி சாதனை

பாலி, ஏப். 27

சர்வதேச ரி - 20 கிரிக்கெட் போட்டியில் தனித்துவ சாதனை படைத்துள்ளார் இந்தோனேசிய மகளிர் கிரிக்கெட் அணியின் 17 வயது வீராங்கனை ரோமாலியா.

மங்கோலியா அணிக்கு எதிரான ரி - 20 போட்டியில் 3. 2 ஓவர்கள் வீசி ஓட்டம் எதுவும் கொடுக்காமல் 7 விக்கெட்டுகளை கைப்பற்றியது தான் அவர் படைத்துள்ள சாதனை.

பாலி பேஷ் சர்வதேச மகளிர் ரி - 20 தொடரில் இந்தோனேசியா மற்றும் மங்கோலியா அணிகள் மோதின. இந்தத் தொடரின் 5 ஆவது ரி- 20 போட்டியில் இந்தோனேசியா அணியில் அறிமுக வீராங்கனையாக விளையாடினார் ரோமாலியா.


இதில் நாணயச்சுழற்சியில் வென்ற இந்தோனேசியா அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. 20 ஓவர்களில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 151 ஓட்டங்கள் எடுத்தது அந்த அணி. 152 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை மங்கோலியா விரட்டியது. 10 ஓவர்களில் 2 விக்கெட்டுகள் இழப்புக்கு 20 ஓட்டங்கள் எடுத்திருந்தது அந்த அணி.

11 ஆவது ஓவரில் பந்து வீச வந்தார் ரோமாலியா. அவர் வீசிய முதல் பந்தில் விக்கெட் வீழ்த்தினார். அதே ஓவரில் மேலும் 2 விக்கெட்டுகளை கைப்பற்றினார். தொடர்ந்து 13 மற்றும் 15 ஆவது ஓவரில் மேலும் 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார். 17 ஆவது ஓவரில் ஒரு விக்கெட் வீழ்த்த 127 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்தோனேசியா அணி வெற்றிபெற்றது.

அவர் வீசிய 20 பந்துகளில் எதிரணி ஓட்டம் எதுவும் எடுக்கவில்லை. 3. 2 ஓவர்கள் வீசி 7 விக்கெட்டுகளை அவர் கைப்பற்றி சாதனை படைத்தார். இதற்கு முன்னர் ரி - 20 கிரிக்கெட்டில் வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் 7 விக்கெட்டுகளைக் கைப்பற்றியுள்ளனர். ஆனால், ஓட்டம் எதுவும் கொடுக்காமல் 7 விக்கெட்டுகளை வீழ்த்தியது இதுவே முதல்முறை. (எ)







# இலங்கைக்கு ஈரான் அதிபர் வந்த நேரத்தில் அமெரிக்க கடற்படையினர் அங்கே என்ன செய்தார்கள்?



இஸ்ரேல் உடனான பதற்றத்திற்கு நடுவே பாகிஸ்தானுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்ட ஈரான் அதிபர் இப்ராஹிம் ரைசி, இலங்கைக்குச் சென்றுள்ளார். 16 ஆண்டுகளுக்குப் பிறகு ஈரான் அதிபர் இலங்கைக்குச் சென்றிருப்பது இதுவே முதல்முறை. அதேநேரம், அமெரிக்க கடற்படை குழுவொன்றும் திருகோணமலைக்குச் சென்றிருப்பது கவனம் பெற்றுள்ளது.

## ஈரான் - இஸ்ரேல் மோதல்

ஏப்ரல் 1ம் தேதி சிரியாவில் உள்ள ஈரான் தூதரக வளாகத்தின் மீது பயங்கர தாக்குதல் நடத்தப்பட்டதைத் தொடர்ந்து ஈரான் - இஸ்ரேல் நாடுகளுக்கு இடையே மோதல் வலுத்தது. தங்கள் தூதரகம் தாக்கப்பட்டதற்கு இஸ்ரேலை குற்றம்சாட்டிய ஈரான், அந்நாட்டின் மீது ஏப்ரல் 13ம் தேதி வான்வழித் தாக்குதலை தொடுத்தது. இது உலக அரங்கில் பெரும் அதிர்வுகளை கிளப்பியது.

இந்த நடவடிக்கைக்கு பதிலடி கொடுக்க, ஈரானின் இஸ்ஃபஹான் பகுதி மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தியதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர். இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பாக இருநாடுகளும் அதிகாரப்பூர்வமாக எந்த கருத்தையும் வெளியிடவில்லை.

இப்படியாக, இருநாடுகளுக்கு இடையே மோதல் போக்கு நிலவி வரும் சூழலில், ஏப்ரல் 21ம் தேதி ஈரான் அதிபர் இப்ராஹிம் ரைசி, பாகிஸ்தானில் 3 நாள் பயணம் மேற்கொண்டார். பாகிஸ்தான் பிரதமர் ஷாபாஸ் ஷெரீஃப், ஜனாதிபதி ஆசிஃப் அலி ஜர்தாரி, இராணுவ தளபதி ஜெனரல் அசிம் முனீர் உள்ளிட்டோரை ரைஸி சந்தித்துப் பேசினார்.

பாகிஸ்தான் பயணத்தை முடித்த பிறகு ஈரான் அதிபர் இப்ராஹிம் ரைஸி புதன்கிழமை காலையில் இலங்கையின் மத்தள சர்வதேச விமான நிலையத்திற்கு சென்றடைந்தார். அவரை இலங்கை பிரதமர் தினேஷ் குணவர்தன விமான நிலையத்திற்குச் சென்று வரவேற்றார்

## புதிய திட்டம் தொடக்கம்

இலங்கை ஈரான் இருதரப்பு நிதியுதவியில் உமா ஓயா பல்நோக்கு வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட நீர்மின் நிலையத்தை ரைஸி திறந்து வைத்தார். தொடர்ந்து ஈரானுக்கும் இலங்கைக்கும் இடையே 5 புதிய ஒப்பந்தங்களும் கையெழுத்தாகின

உமா ஓயா திட்டம் இலங்கையின் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த திட்டம் என இலங்கை ஜனாதிபதி மாளிகை தெரிவிக்கிறது.

ஜனாதிபதி மாளிகையின் செய்திக்குறிப்பின் படி, இலங்கையின் தென்கிழக்கில் வறண்ட பகுதிகளில் நிலவும் நீர்ப் பற்றாக்குறையைப் தனிப்பதற்காக, உமா ஓயாவில் ஆண்டுதோறும் சேரும் 145 கன மீட்டர் தண்ணீருக்கும் மேலதிகமான தண்ணீரை கிரிந்தி ஓயவிற்கு திருப்பிவிடுவதே இத்திட்டத்தின் பிரதான நோக்கமாகும்.

ஓய என்பது நீர்நிலைகளை குறிப்பதாகும். இந்த திட்டத்தின் மூலம் விவசாய நிலங்களுக்கு நீர் பாசன வசதி கிடைப்பதோடு, குடிநீர் தேவையும் பூர்த்தி செய்யப்படும் இத்திட்டத்தின் மூலம் 290 ஜிகாவாட் மின் சக்தியும் கிடைக்கும் என இலங்கை அரசு கூறுகிறது.

இந்த நிகழ்ச்சியின்போது, இந்திய பெருங்கடலில் இலங்கையின் வளர்ச்சித் திட்டங்களுக்கு தொடர்ந்து ஆதரவளிப்போம் என ஈரான் அதிபர் ரைஸி உறுதியளித்தார். அனைத்து ஆசிய நாடுகள், அண்டை நாடுகள், இறையாண்மை மற்றும் சுதந்திர நாடுகளுடன் இருதரப்பு உறவை விரிவுபடுத்த ஈரான் தயாராக இருப்பதாகவும் அவர் கூறினார்.

ரைஸி தொடங்கி வைத்த திட்டத்தின் மதிப்பு சுமார் 514 மில்லியன் டாலர் என ராய்ட்டர்ஸ் செய்தி முகமை தெரிவிக்கிக்கிறது.

2008-ஆம் ஆண்டில் இந்த திட்டத்திற்காக ஈரான் இலங்கைக்கு நிதியுதவி செய்வதாகக் கூறியிருந்தது. இதன் அடிப்படையில் 2013-ம் ஆண்டு வரை 50 மில்லியன் டாலர்களை இலங்கைக்கு ஈரான் வழங்கியது. அதன் பிறகு ஈரானால் நிதிப் பங்களிப்பு செய்ய முடியவில்லை. அந்த சமயம், அமெரிக்கா, ஈரான் மீது சர்வதேச தடைகளை விதித்ததால் மேற்கொண்டு இலங்கைக்கு பொருளாதார பங்களிப்பை ஈரானால் செய்ய முடியவில்லை.

ஈரான் அதிபர் தனது ஆசிய சுற்றுப்பயணத்தின் போது இலங்கைக்கு வந்து, இந்த திட்டத்தை திறந்து வைப்பது நாட்டின் பொருளாதாரத்திற்கு பெரும் ஊக்கத்தை அளிக்கும் என இலங்கை வெளியுறவு அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

கடந்த பத்து ஆண்டுகளில் இழந்த சந்தையை மீட்டெடுத்து, இலங்கையின் தேயிலை ஏற்றுமதி சந்தையை பலப்படுத்தியதன் மூலம், கடந்த இரண்டு ஆண்டுகளில் இலங்கையின் அதிக தேயிலையை கொள்வனவு செய்யும் நாடாக ஈரான் மாறியிருப்பதாகவும் அவர் கூறினார்.

## அமெரிக்கா அதிருப்தி?

ஈரான் அதிபர் இலங்கைக்கு வருவது குறித்து அமெரிக்கா அதிருப்தி அடைந்திருப்பதாக சில செய்திகள் வெளியாகின. இது குறித்து பேசிய இலங்கை வெளியுறவுத்துறை அமைச்சர் அலி சப்ரி, “உண்மையில், யாரும் எங்களுக்கு கவலையோ எதிர்ப்போ தெரிவிக்கவில்லை. மற்றவர்களின் எதிரிகள் எங்களுக்கும் எதிரிகள் அல்ல. இலங்கையின் வெளியுறவுக் கொள்கை அனைவருக்கும் நட்பு கரங்களை நீட்டுகிறது. ஈரான் அதிபரின் பயணம் திடீரென திட்டமிடப்பட்டது அல்ல. இந்த வளர்ச்சித் திட்டத்திற்கான பணிகள் முடிந்ததும் திறப்பு விழாவுக்கு அவரை அழைக்க வேண்டும் என முன்பே முடிவு செய்திருந்தோம்” என்றார்.

தொடர்ந்து பேசிய அலி சப்ரி, “கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் நான் ஈரானுக்கு பயணம் மேற்கொண்ட போது, அதிபர் ரைஸிக்கு, இலங்கை அரசு சார்பில் அழைப்பிதழை வழங்குமாறு ஜனாதிபதி அறிவுறுத்தினார். அதன் அடிப்படையில்தான் தற்போது ஈரான் அதிபர் இலங்கை வந்திருக்கிறார். சுதந்திர நாடாக, நாங்கள் அணிசேரா வெளியுறவுக் கொள்கையை பின்பற்றுகிறோம்” என கூறினார்

ஈரான் ஜனாதிபதியின் இலங்கை பயணம், சர்வதேச ரீதியாகவும் பொருளாதார, அரசியல் ரீதியாகவும் இலங்கை மீது எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தும் என சர்வதேச உறவுகள் தொடர்பான ஆராய்ச்சியாளரும் ஆலோசகருமான கலாநிதி ஹசித் கந்தவுடஹேவாவிடம் கேட்டபோது..

இதற்குப் பதிலளித்த அவர், ஈரான் அதிபரின் இலங்கை பயணத்தில் சாதகமும் பாதகமும் இருப்பதாகக் கூறினார்.

ஏப்ரல் 13ம் தேதி இஸ்ரேலுக்கும் ஈரானுக்கும் மோதல் தீவிரம் அடைவதற்கு முன்பே, ஈரான் அதிபர் ரைஸி இலங்கைக்கு பயணம் செய்ய திட்டமிட்டிருந்தார். ஆனால் அப்போது இலங்கை ஒரு வகையான இராஜ தந்திர சிக்கலை எதிர்கொண்டது. காரணம், இலங்கையில் உள்நாட்டுப் போரின் போது இராணுவ ஆதரவை வழங்கிய நாடாக இஸ்ரேல் இருந்தது.

மறுபுறம், இஸ்ரேலும் இலங்கையும் தற்போது பல்வேறு பொருளாதார, வேலைவாய்ப்பு மற்றும் வர்த்தக உடன்படிக்கைகளை மேற்கொண்டுள்ளன.



இதன் காரணமாக ஈரான் அதிபரின் இலங்கை பயணம், இஸ்ரேலுடன் தற்போதுள்ள உறவுகளுக்கு ஏதோ ஒரு வகையில் பின்னடைவை ஏற்படுத்தலாம்.

“தற்போது இலங்கை சர்வதேச நாணய நிதியத்துடன் கடன் மறுசீரமைப்பு திட்டத்தில் உள்ளது. எனவே இந்த திட்டத்திற்கு அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகளின் ஆதரவைப் பெறுவது அவசியம். இந்த கோணத்தில் பார்த்தால், ஈரான் அதிபரின் பயணத்திற்காக இலங்கைக்கு அமெரிக்கா நேரடியாக தமது எதிர்ப்பை பதிவு செய்யும் சாத்தியக்கூறுகள் உள்ளன” என்கிறார் கலாநிதி ஹசித் கந்தவுடஹேவா.

இலங்கையின் தேயிலை மற்றும் ஏனைய ஏற்றுமதிப் பொருட்களை அதிகளவில் இறக்குமதி செய்யும் நாடாக ஈரான் திகழ்கிறது. எனவே, இந்த சூழலில், ரைஸி வருகை தர வேண்டாம் என இலங்கை முடிவெடுத்தால், அது இலங்கையின் பொருளாதாரத்திற்கு பலத்த அடியாக அமையும். எதிர்காலத்தில் ஈரானிடம் இருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய பொருளாதார ஒத்துழைப்பை இலங்கை இழக்க நேரிடும் என கலாநிதி ஹசித் கந்தவுடஹேவா குறிப்பிடுகிறார்.

அமெரிக்க கடற்படையினர் என்ன செய்கிறார்கள்?

ஈரான் அதிபரின் வருகைக்கு நடுவே, இலங்கையின் திருகோணமலைக்கு அமெரிக்க கடற்படையினரும் சென்றுள்ளனர். அமெரிக்கா கடற்படையினர் இலங்கை கடற்படையினருடன் இணைந்து மேற்கொள்ளும் பயிற்சி நடவடிகைக்களுக்காக ஏப்ரல் 22 முதல் 26 வரை திருகோணமலையில் இருப்பார்கள் என இலங்கைக்கான அமெரிக்க தூதரகம் தெரிவித்துள்ளது.

கடல் பாதுகாப்பு மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு ஆகியவற்றில் நிபுணத்துவம் பெற்ற மரைன் கார்ப்ஸின் சிறப்புப் பிரிவான குயுளூவு எனும் யுனைடெட் ஸ்டேட்ஸ் ஃப்ளீட் ஆண்டி டெரரிசம் செக்யூரிட்டி டீம் (ஃபாஸ்ட்) இந்த பயிற்சியில் பங்கேற்பதாக இலங்கைக்கான அமெரிக்க தூதரகம் கூறியுள்ளது.

# இந்திய தேர்தலில் பா.ஜ.க. முதல் வெற்றியை பதிவுசெய்தது!

## போட்டியின்றியே தெரிவான சூரத் தொகுதி வேட்பாளர் !!






தேர்தல் நடப்பதற்கு முன்பே, குஜராத்மாநிலத்தின் சூரத் மக்களவைத் தொகுதியில் போட்டியிடும் பாஜக வேட்பாளர் முகேஷ் தலால் வெற்றி பெற்றுவிட்டார்.

ஆம், அவருக்கு எதிரான காங்கிரஸ் வேட்பாளரின் வேட்பு மனு ரத்து செய்யப்பட்டது. மீதமுள்ள சுயேச்சை வேட்பாளர்களும் தங்கள் பெயர்களை வாபஸ் பெற்றனர். எனவே, அவர் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

முகேஷ் தலால் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்ட விவகாரம் தொடர்பாக நாடு முழுவதும் ஊடகங்களில் பரபரப்பாகப் பேசப்பட்டு வருகிறது.

கடந்த எழுபது ஆண்டுகளில், சூரத் மக்களவைத் தொகுதியின் வரலாற்றில், இப்படி நடப்பது இதுவே முதல்முறை. இந்த விவகாரத்தில் பாஜகவும் காங்கிரஸும் மாறி மாறி குற்றம்சாட்டி வருகின்றனர்.

பாஜக ஜனநாயகத்தைக் கொன்றுவிட்டதாக காங்கிரஸ் கூறுகிறது. அதேநேரம், காங்கிரஸ் வேட்பாளரின் ஆதரவாளர்கள் தங்கள் வேட்பாளரின் பெயர் தவறாகக் குறிப்பிடப்பட்டுள்ளதாக பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்தனர். எனவே அவரது வேட்புமனு ரத்து செய்யப்பட்டது. இதில் பாஜகவின் தவறு என்ன?' என்கிறது பாஜக தரப்பு.

இந்த விவகாரத்தில், பாஜகவின் தேசிய பொதுச் செயலாளர் வினோத் தாவ்டே, சுயேச்சை வேட்பாளர்களிடம் வேட்பு மனுக்களை வாபஸ் பெறுமாறு தனது கட்சி கோரிக்கை விடுத்ததை ஒப்புக் கொண்டார்.

சூரத் நகர பாஜக தலைவர் நிரஞ்சன் ஜான்ஸ்மேரா அளித்த பேட்டியில், “காங்கிரஸ் வேட்பாளரின் வேட்பு மனுவில் முரண்பாடு இருப்பது கண்டறியப்பட்டதும், எங்கள் கட்சித் தலைவர்கள் தீவிரம் காட்டத் தொடங்கினர்,” என்றார்.

சூரத்தில் மொத்தம் 15 வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இதில் காங்கிரஸின் நிலேஷ் கும்பனி உட்பட 6 பேரின் படிவங்கள் ரத்து செய்யப்பட்டன. இதன்மூலம் பாஜக வேட்பாளர் முகேஷ் தலால் தவிர 8 வேட்பாளர்கள் எஞ்சியிருந்தனர். ஆனால் இந்த எட்டு வேட்பாளர்களும் தங்கள் படிவங்களைத் திரும்பப் பெற்றனர். இதனால் முகேஷ் தலால் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் முழுக்க முழுக்க பாஜகவின் உத்தரவின் பேரில் நடந்ததாக காங்கிரஸ் குற்றம் சாட்டிய நிலையில், பாஜக இதைத் திட்டவட்டமாக மறுத்துள்ளது.

### நிலேஷ் கும்பனி விவகாரத்தில் உண்மையில் என்ன நடந்தது?

காங்கிரஸ் தலைவரும் நவ்சாரி தொகுதியின் காங்கிரஸ் வேட்பாளருமான நைஷாத் தேசாய் அளித்த பேட்டியில், “பாஜக சூரத்தில் உள்ள மெரிடியன் ஹோட்டலுக்கு ஏழு சுயேச்சை வேட்பாளர்களையும் வரவழைத்து, வேட்புமனுக்களை திரும்பப் பெற சொன்னதாக”



கூறினார்.

“பகுஜன் சமாஜ் கட்சி வேட்பாளர் பியாரேலால் பார்தி மட்டும் அவர்களுடன் தொடர்பில் இல்லாமல் இருந்தார். எனவே பாஜக தங்கள் அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தி, குற்றப்பிரிவு காவல்துறையை வைத்து அவருக்கு எதிராகக் காய் நகர்த்தியது. காவல்துறையினர் வலுக்கட்டாயமாக அவரை மத்திய பிரதேசத்தில் இருந்து அழைத்து வந்தனர். பின்னர் அவரது வேட்புமனுவும் திரும்பப் பெறப்பட்டது,” என்றார்.

ஆனால், அனைத்து குற்றச்சாட்டுகளையும் பாஜக மறுத்துள்ளது. முகேஷ் தலாலின் வெற்றி விதிகளின்படிதான் அறிவிக்கப்பட்டது என்றும், கட்சி மீது கூறப்படும் குற்றச்சாட்டுகளில் உண்மை இல்லை என்றும் பாஜக தரப்பு தெரிவித்துள்ளது.

மேலும், காங்கிரஸ் வேட்பாளர் நிலேஷ் கும்பனியின் வேட்புமனு நிராகரிக்கப்பட்ட பின்னர் அவரைக் காண




வில்லை என்று கூறப்படுகிறது. அவரைப் பற்றிய எந்தத் தகவலும் இல்லை என்கிறது சூரத் வட்டாரம். அவரது வீடும் பூட்டப்பட்டுள்ளது. கும்பனி எங்கே என்று காங்கிரஸ் தலைவர்களுக்கே தெரியாதா?

மறுபுறம், காங்கிரஸ் தொண்டர்கள் கும்பனியின் வீட்டிற்கு வெளியே ஆர்ப்பாட்டம் செய்தனர். அவரது வீட்டிற்கு வெளியே “துரோகி” என்று குறிப்பிட்டு போஸ்டர் ஒட்டினர். ஆர்ப்பாட்டம் செய்தவர்களை காவல்துறை கைது செய்தது.

நிலேஷ் கும்பனி கடைசியாக 21ஆம் தேதி காலை விசாரணைக்காக கலெக்டர் அலுவலகத்திற்கு வந்தார், அவருடன் சில காங்கிரஸ் தலைவர்களும் வந்தனர். சிறிது நேரம் கழித்து கும்பனி அங்கிருந்து வெளியேறினார். அதன் பிறகு அவரைப் பற்றிய எந்தத் தகவலும் இல்லை. காங்கிரஸ் தலைவர்களும் அவரைத் தொடர்பு கொள்ள முடியவில்லை என்று கூறி வருகின்றனர்.

காங்கிரஸ் தலைவர் அஸ்லம் சைகல்வாலா, “21ஆம் தேதி மதியம் 12:30 மணிக்கு நிலேஷ் கும்பனியுடன் தொலைபேசியில் உரையாடினேன். நான் எதிலும் சம்பந்தப்படவில்லை என்று அவர் கூறினார். நான் எதுவும் சொல்லும் நிலையில் இல்லை, என் மீது அதிக அழுத்தம் கொடுக்கப்படுகிறது என்றும் கும்பனி கூறினார். அதன்பிறகு நான் அவருடன் பேசவில்லை,” என்றார்.

மேலும் பேசிய அஸ்லாம் சைகல்வாலா, “கும்பனியின் மூன்று ஆதரவாளர்கள் பற்றி கட்சிக்கு எந்தத் தகவலும் தெரியவில்லை. அவரின் வேட்புமனுவுக்கு யார் ஆதரவு கொடுப்பார்கள் என்பதை கும்பனியே முடிவு செய்திருந்தார். அதன்பிறகுதான் அவர்களின் பெயர்கள் கட்சிக்கு தெரிய வந்தது,” என்றார்.

கும்பனி மீது குற்றம்சாட்டிய அவர், “எல்லாம் முன் கூட்டியே திட்டமிட்டு நடந்ததாகத் தெரிகிறது. இது மிகப்பெரிய சதி. கும்பனி இனி வெளியே தலைகாட்ட முடியாது. மக்களை எதிர்கொள்ள முடியாது,” என்றார்.

இந்தச் சம்பவம் முழுக்க முழுக்க பாஜகவின் உத்தரவின் பேரில் நடந்ததாக காங்கிரஸ் குற்றம் சாட்டிய நிலையில், பாஜக அதை மறுத்துள்ளது.

ஏப்ரல் 21ஆம் தேதி காங்கிரஸ் வேட்பாளரின் வேட்புமனு ரத்து செய்யப்பட்டதை அடுத்து, ஏப்ரல் 22ஆம் தேதி முகேஷ் தலால் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. இவை அனைத்தும் 24 மணிநேரத்தில் நடந்தது.

### நிலேஷ் கும்பனி எங்கே?

சூரத்தின் சர்தானா பகுதியில் உள்ள ஸ்வஸ்திக் டவரில் நிலேஷ் கும்பானி வசித்து வருகிறார். கும்பனியின் வீட்டுக்குச் சென்று பார்த்தபோது, அது பூட்டப்பட்டிருந்தது. அங்கு சில காவல்துறை அதிகாரிகள் இருந்தனர். கும்பனி வீட்டில் யாரும் இல்லை என போலீசார் தெரிவித்தனர்.

இதுகுறித்து அஸ்லம் சைகல்வாலா பேசுகையில், “கும்பனி தற்போது கோவாவில் அவரது குடும்பத்தினருடன் இருப்பதாக எங்களுக்குத் தகவல் கிடைத்தது. நாங்கள் அவரைத் தொடர்புகொள்ளத் தொடர்ந்து முயன்று வருகிறோம், ஆனால் முடியவில்லை,” என்றார்.

காங்கிரஸ் தலைவர் நைஷாத் தேசாய் கூறுகையில், “கும்பனியின் வேட்புமனு விவகாரத்தில் குஜராத் உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்ய உள்ளோம். ஆனால் அவர்கள் யாருமே தொடர்பில் இல்லை. பிரமாணப் பத்திரத்தின் நகலை இதுவரை எங்களிடம் தரவில்லை. அதை வைத்துத்தான் நாங்கள் மனு தாக்கல் செய்ய முடியும்.

கும்பனி பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்த விதத்தைக் கருத்தில் கொண்டு, அதன் நகல் எதுவும் கொடுக்கப்படவில்லை என்பதால் அவரது நடவடிக்கை சந்தேகத்திற்கு உரியதாகத் தெரிகிறது. கும்பனி பாஜகவில் சேரலாம் என்ற ஊகங்கள் உள்ளன,” என்றார்.

சூரத் நகர பாஜக தலைவர் நிரஞ்சன் ஜான்ஸ்மேரா அளித்த பேட்டியில், “நிலேஷ் கும்பனியின் வேட்புமனுவில் முரண்பாடு இருப்பதை அறிந்ததும், கட்சித் தலைவர்கள் தீவிரமாக நடவடிக்கை மேற்கொண்டனர். கும்பனியின் படிவத்தில் உள்ள ஆதரவாளர்களின் கையெழுத்து போலியானது என்று கலெக்டரிடம் பிரமாணப் பத்திரம் கொடுத்தோம். அதனால் அவரது வேட்புமனு ரத்து செய்யப்பட்டது.”

ஆனால், கும்பனி தரப்பு வழக்கறிஞர் ஜமீர் ஷேக் கூறுகையில் “கடந்த 19ஆம் தேதி படிவங்களைச் சரிபார்க்கும்போது, பாஜக தேர்தல் முகவர் ஆட்சேபனை தெரிவித்தார். கலெக்டரிடம் ஆதரவாளர்கள் தங்கள் கையெழுத்து போலியானது எனச் சொல்வதற்கு முன்னரே இந்த வேட்புமனுவில் பிரச்னை இருக்கிறது என, பாஜகவுக்கு எப்படி தெரியும்?” என்று சந்தேகம் எழுப்புகிறார்.

(16ம் பக்கம் பார்க்க)

ஈழநாடு



# இந்திய தேர்தலில் பா.ஜ.க. முதல் வெற்றியை...

(15ம் பக்கத் தொடர்ச்சி)

காங்கிரஸ் தலைவரின் வேட்புமனு ரத்து செய்யப்பட்டதை அடுத்து, பாஜக வேட்பாளர் முகேஷ் தலாலுக்கு எதிராக சுயேச்சை மற்றும் பகுஜன் சமாஜ் கட்சி வேட்பாளர்கள் களத்தில் இருந்தனர். ஆனால், கடைசி நாளில் அனைவரும் வேட்புமனுவை வாபஸ் பெற்றனர்.

இதுகுறித்து, ஏப்ரல் 23ஆம் தேதி நடந்த செய்தியாளர் சந்திப்பில், பாஜக தேசிய பொதுச்செயலாளர் வினோத் தாவ்டே, காங்கிரஸ் வேட்பாளரின் வேட்பு மனு ரத்து செய்யப்பட்ட பின், சுயேச்சை வேட்பாளர்கள் மற்றும் பிற வேட்பாளர்களைத் தொடர்பு கொண்டு, படிவங்களைத் திரும்பப் பெறும்படி பாஜக கூறியதை ஒப்புக் கொண்டார்.

“பாஜக கீழ்த்தரமான அரசியல் செய்கிறதா?” எனக் குறிப்பிட்டு சூரத்தில் காங்கிரஸ் வேட்பாளர் வேட்பு மனு ரத்து செய்யப்பட்டதைப் பற்றி வினோத் தாவ்டேவிடம் கேள்வி எழுப்பப்பட்டபோது, “எதிர்க்கட்சி வேட்பாளர்கள் தவறான முறையில் வேட்பு மனு படிவத்தை நிரப்பினால் ஆட்சேபனை தெரிவிப்பது கீழ்த்தரமான அரசியல் அல்ல. சுயேச்சை வேட்பாளர்களிடம் வேட்புமனுக்களைத் திரும்பப் பெறச் சொல்லியிருந்தால் அதுதான் கீழ்த்தரமான அரசியல். ஆனால் அவர்கள் படிவங்களைப் பூர்த்தி செய்து சமர்பிக்கும் முன்னரே அவர்களிடம் நாங்கள் சுமூகமாகப் பேச்சுவார்த்தை நடத்தினோம்,” என்றார்.

பாஜக தரப்பில் சுயேச்சை வேட்பாளர்களைத் தொடர்புகொண்டு வேட்பு மனுக்களைத் திரும்ப பெறச் சொன்னதை ஒப்புக் கொள்கிறீர்களா என அவரிடம் செய்தியாளர் கேட்டபோது, “ஆம், வேட்பு மனுவை திரும்பப் பெறுமாறு அனைத்து வேட்பாளர்களையும் தொடர்பு கொண்டு பேசினோம். ஆனால் அவர்கள் வேட்பு மனு படிவத்தை நிரப்புவதற்கு முன்பே அவர்களைச் சம்மதிக்க வைக்க முயன்றோம். பாஜக எப்போதுமே தேர்தல் ஆணைய விதிகளின்படிதான் தேர்தலில் வெற்றி பெறப் போராடும்,” என்றார்.

நிலேஷ் கும்பனியின் வேட்புமனு நிராகரிக்கப்பட்ட பிறகு, மற்ற வேட்பாளர்களின் பங்கு முக்கியமானதாகக் கருதப்பட்டது. ஆனால், எட்டு வேட்பாளர்களில் ஏழு பேர் வேட்புமனுவை வாபஸ் பெற்றனர். ஆனால் பகுஜன் சமாஜ் கட்சி வேட்பாளர் பியாரேலால் பார்தியின் வேட்புமனு வாபஸ் பெறப்படவில்லை.

அழுத்தம் கொடுக்கும் அரசியல் செய்யப்படுகிறதா?

இதுகுறித்து நவ்சாரி தொகுதி காங்கிரஸ் வேட்பாளர் நைஷாத் தேசாய் கூறுகையில், “பகுஜன் சமாஜ் கட்சியின் அஷ்வின் பரோட், சுரேஷ் சோனாவனே ஆகியோரிடம் போனில் பேசினோம். வேட்பாளர் பியாரேலாலுக்கு ஆதரவளிக்க காங்கிரஸ் ஒப்புக்கொண்டது. அவரை குஜராத்தை விட்டு வெளியே அழைத்துச் செல்லுமாறு அவர்களிடம் கூறினோம். ஆனால் திங்கள்கிழமை மதியம் 2 மணியளவில் திடீரென அவரின் வேட்பு மனு வாபஸ் பெறப்பட்டது. சூரத்தில் தேர்தல் பற்றிய எங்களின் நம்பிக்கை சுக்குநூறானது,” என்றார்.



பகுஜன் சமாஜ் கட்சியின் சூரத் மாவட்டத் தலைவர் சதீஷ் சோனாவனே கூறுகையில், கடந்த சில நாட்களாக சூரத்தில் நடந்த சம்பவங்களைி பார்த்தபோது அங்கு நிலவும் சூழலை எங்களால் புரிந்துகொள்ள முடிந்தது. எங்கள் வேட்பாளருக்கு அழுத்தம் கொடுக்கப்படும் என்று யூகித்தோம், எனவே நாங்கள் பியாரேலாலை தலைமறைவாக்க எண்ணினோம்.

அவர் எங்களுடன் தொடர்பில்தான் இருந்தார். ஆனால் திங்கட்கிழமை முதல் அவரைத் தொடர்பு கொள்ள முடியவில்லை. நாங்கள் அவரைத் தேடிக் கொண்டிருந்தபோது, பியாரேலால் ஆட்சியர் அலுவலகத்திற்கு வந்து வேட்புமனுவை வாபஸ் பெற்றதை ஊடகங்கள் மூலம் அறிந்தோம்.

விஷயம் கேள்விப்பட்டதும் ஆட்சியர் அலுவலகத்துக்கு விரைந்தோம். ஆனால் அவர் அங்கிருந்து சென்றுவிட்டதாகச் சொன்னார்களா. அதன்பிறகு எந்தத் தொடர்பும் இல்லை,” என்றார்.

மற்றொரு சுயேச்சை வேட்பாளரான ரமேஷ் பரைய்யாவை தொடர்பு கொண்டோம். இதுகுறித்து ரமேஷ் பரைய்யா கூறுகையில், “நான் காங்கிரஸ் தலைவரைத் தொடர்பு கொண்டு, எனக்கு ஆதரவு அளிக்குமாறு கேட்டேன். ஆனால், அவர்களிடமிருந்து எந்தப் பதிலும் வரவில்லை. மேலும் செலவுகள் குறித்து காங்கிரசிடம் பேசியபோதும் எந்தப் பதிலும் இல்லை. எனவே பாஜகவுக்கு எதிராகப் போட்டியிட வேண்டாம் என்று முடிவு செய்தேன். அதனால் எனது வேட்புமனுவை வாபஸ் பெற்றேன்,” என்றார்.

எனினும், ஏதாவது பெருந்தொகை அல்லது அழுத்தம் காரணமாக வேட்புமனுவை வாபஸ் பெற்றாரா என்று ரமேஷ் பரைய்யாவிடம் கேட்டபோது “இல்லை, எனக்குப் பணம் எதுவும் வழங்கப்படவில்லை. என் மீது எந்த அழுத்தமும் கொடுக்கப்படவில்லை. நான் தானாக முன்வந்து எனது வேட்புமனுவை வாபஸ் பெற்றேன்,” என்று கூறினார்.

**சதியில் ஆதரவாளர்களின் பங்கு என்ன?**

ரமேஷ்பாய் பல்வந்த்பாய் போலரா, ஜகதீஷ் நாக்ஜிபாய் சவாலியா மற்றும் துருவின் திருபாய் தமேலியா ஆகியோர் நிலேஷ் கும்பனியின் ஆதரவாளர்களாக வேட்பு மனுவில் கையெழுத்திட்டனர். ஜகதீஷ் சவாலியா நிலேஷ் கும்பனியின் மைத்துனர், துருவின் தமேலியா அவரது மருமகன் மற்றும் ரமேஷ் போலாரா அவரது வணிகப் பங்குதாரர்.

இந்த மூன்று பேரும் நிலேஷ் கும்பனியுடன் தனிப்பட்ட முறையில் தொடர்பு உள்ளவர்கள். அப்படியிருக்க அவர்கள் மூவரும், கும்பனி வேட்பு மனுவில் தங்களின் கையெழுத்து பொய்யானது என ஆட்சியர் அலுவலகம் சென்று பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்தது ஏன் என்ற கேள்விகள் எழுந்துள்ளன.

இந்தச் சம்பவத்திற்குப் பிறகு இந்த மூன்று ஆதரவாளர்களும் தலைமறைவாகி விட்டனர்.

ஜமீர் ஷேக், “இந்த விவகாரத்தில் ஆதரவாளர்களின் பங்கும் , கும்பனியின் நடவடிக்கையும் சந்தேகத்திற்கு உரியது. எல்லாம் திட்டமிட்ட சதி எனத் தெளிவாக தெரிகிறது” என்று குற்றம் சாட்டுகிறார்.

கும்பனி முதலில் உம்ரா காவல் நிலையத்திற்குச் சென்று தனது ஆதரவாளர்கள் கடத்தப்பட்டதாக புகார் அளித்தார். அதன் பிறகு அவர்கள் காணாமல் போனார்கள். ஆதரவாளர்கள் கடத்தப்பட்ட குற்றச்சாட்டு குறித்து சூரத் முன்னாள் மேயர் ஜெகதீஷ் படேல் கூறுகையில், ”தேர்தல் வந்தாலும் இல்லாவிட்டாலும், பாஜகவை குற்றம் சாட்டுவது காங்கிரஸ் தலைவர்களின் வேலை. அனைவரின் முன்னிலையிலும்தான் படிவங்கள் நிரப்பப்பட்டன?” என்றார்.





